பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 20 திங்கட்கிழமை (05.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 09

# கோண்டாவிலில் கிளைமோர் தாக்குதல்!

## 6 சிப்பாய்கள் பலி! ஒருவர் படுகாயம்!!

## யுத்தநிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின் வடக்கில் முதலாவது மோசமான சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்5

**யாழ். பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு சமீபமாக அமைந்துள்ள இராணுவ முகாமுக்குச் சற்று முன்பாக நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இராணுவ டிராக்டர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.**

**இத்தாக்குதலில் ஆறு படையினர் உயிரிழந்தனர். சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். வீதியில் சென்ற பொதுமக்கள் மூவரும் காயமுற்றனர்.**

நல்லூர் பிரதேச செயலக அலுவலகத்துக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் - விவசாயப்பயிற்சிக் கல்லூரிக்குச் சமீபமாக - அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்து, வெளியில் கடமையிலிருக்கும் படையினருக்கு மதிய உணவு விநியோகம் செய்யச் சென்ற இராணுவ டிராக்டரே கிளைமோரில் சிக்கியது.

டிராக்டர் பலத்த சேதமடைந்தது. அதில் பயணித்தவர்களில் 6 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; ஒரு சிப்பாய் காயமடைந்தார். அவர் உடனடியாகப் பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சம்பவம் நடந்தவுடன் அங்கு விரைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் வீதியால் சென்றவர்களைப் பிடித்து நையப்புடைத்தனர். பலர் பலத்த அடிகாயங்களுக்கு இலக்காகினர்.

இவ்வாறு பலத்த காயங்களுக்கு இலக்கானவர்களில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலைப் பகுதியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் விக்கினானந்தம் (வயது 30)

(14ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலையிலும் குண்டுவெடிப்பு!

கரவெட்டி, டிசெ5

துன்னாலைப் பகுதியில் நேற்று மாலை குண்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, முள்ளிப்பகுதி, மந்திகை மற்றும் நெல்லியடி ஆகிய பகுதிகளிலுள்ள முகாமைச் சேர்ந்த பெருமளவான இராணுவத்தினர் அப்பகுதி நோக்கிச் சென்றனர். அத்துடன் வீதியால் சென்றவர்களை அச்சுறுத்தும் வகையில் படையினர் நடந்துகொண்டனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, ஹெலிகொப்டர் ஒன்றும் மிகவும் தாழ்வாகப் பறந்து வடமராட்சிப் பகுதி முழுவதையும் நோட்டமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-70-410)

## ஊரடங்கு இல்லை படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

கோண்டாவில் பகுதியில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து கோண்டாவில், திருநெல்வேலி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் நேற்று முன்னிரவு முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி பரவியது.

இதனையடுத்து, கடைகள் இழுத்து மூடப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியிலும் நேற்றுத் தாக்குதல் ரோந்து சென்ற சிப்பாய் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.5

நீர்வேலியில் அத்தியார் இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றுமாலை 6.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

ஹேரத் முதலின் சிலாகே அபயவர்த்தன என்ற சிப்பாயே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் - தாக்குதலில் காயமடைந்த சிப்பாய் உடனடியாக பலாலி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவரது உயிர் பிரிந்தது என்றும் - படைத்தரப்பு அறிவித்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் தேடுதல்!

யாழ்ப்பாணம்,டிசெ.5

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள அரஸ்கோ நிறுவனம் நேற்று மாலை படையினரால் முற்றுகையிடப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமாலை பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு நிறுவனத்தில் பாரிய தேடுதல் நடத்தப்பட்டது.

அத்துடன், அப்பகுதியில் வீதி எங்கும் ராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனை

(14ஆம் பக்கம் பார்க்க)

## கவலைதரும் சம்பவம்: கண்காணிப்புக் குழு பிரதிநிதி

கொழும்பு,டிசெ.5

கோண்டாவில் தாக்குதல் சம்பவம் கவலை தரும் சம்பவம். - இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறியதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்ததாக பி.பி.ஸி. மேலும் கூறியதாவது:-

கடந்த 3 வருட சமாதான காலத்தில் நடந்த முதலாவது மோசமான சம்பவமாக இந்தத் தாக்குதல் அமைந்துள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டது. (எ-410)

## மஹிந்த ஜனாதிபதியானதும் கருணா குழு கிழக்கில் தோன்றி முகாம்கள் அமைப்பு!

கொழும்பு,டிசெ.5

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வென்று பதவியேற்றதும் அதுவரை கிழக்கில் மறைவாக இயங்கிவந்த கருணா குழு, வெளிப்பட்டு தமது முகாம்களை - குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் - நிறுவத்தொடங்கிவிட்டது.

'த சண்டே லீடர்' பத்திரிகையில் அரசியல் நிலைவரம் பற்றிய வாராந்தக் கட்டுரையில் அதன் பத்தி எழுத்தாளர் சுரனிமல இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

தமண பொலீஸ் பிரிவில் உள்ள பன்னல்கன, மாந்தட்டுண பிரதேசங்களிலேயே முழு ஆயுதங்களோடு கருணா குழு முகாம்களை அமைக்கத் தொடங்கியுள்ளது. இது அப்பிரதேசத்தில் வசிக்கும் சிங்களக் குடிமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதுகுறித்து அவர்கள் பொலீஸாரிடம் பல முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். ஆனால், கருணா குழுவை முகாம்கள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கும்படியான உத்தரவு மேலிடத்திலிருந்து வந்திருப்பதால் தாங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பதற்றம் நீடிப்பு!

### முஸ்லிம்களின் 3 சடலங்கள் நேற்று மீட்பு

திருகோணமலை,டிசெ.5

திருகோணமலை, மூதூரில் மூன்று முஸ்லிம் வர்த்தகர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, அங்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே மீண்டும் பதற்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

முன்னதாகக் கடந்த சனிக்கிழமை தோப்பூரில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஹாஜாமுஹைதீன் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார். இதனையடுத்து, தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது இரு தமிழர்கள் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உயர்மட்டக் குழு நேற்று ஹெலி மூலம் மூதூர் விரைவு

கொழும்பு,டிசெ.5

திருகோணமலை, மூதூரில் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுவரும் பதற்ற நிலையைத் தணிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

மூதூரில் அமைதியை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் தலைமையிலான குழுவொன்றை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் வியாழனன்று கிளிநொச்சிக்கு விரைகின்றார்

கிளிநொச்சி,டிசெ.5

புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபின் அடுத்த கட்ட நகர்வு குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாட நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் எதிர் வரும் 8 ஆம் திகதி - வியாழனன்று - கிளிநொச்சி வருகின்றார்.

அன்று காலை அவர் முல்லைத்தீவுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்தும் ஆராய்வார். மறுநாள் காலை அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் தற்போதைய நிலைவரம் குறித்துக் கலந்துரையாடுவார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் மாவீரர் எழுச்சி தின நிகழ்வு

பாரிஸ்,டிசெ.5


தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் பாரிஸின் புறநகர்ப்பகுதியில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு மிகவும் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன.

இந்நிகழ்வில் தமிழக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் ஈகச் சுடரேற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் பாரிஸ் கிளைப் பொறுப்பாளர் பருதி ஏற்றிவைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி உட்படப் பலர் சிறப்புரையாற்றினர்.

விடுதலைப் புலிகளின் பாரிஸ் கிளை பரப்புரைப் பொறுப்பாளர் மேத்தா உட்படப் புலம்பெயர்ந்து அந்நாட்டில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையான ஈழத்தமிழர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-410)





கோண்டாவில் பகுதியில் நேற்று நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலை அடுத்து பலாலி வீதி வெறிச்சோடிக் கிடப்பதையும் படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

வலிகாமம் மற்றும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் II இற்குட்பட்ட ஜி.சீ.ஈ. சாதரண தரப் பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோர் இதில் தவறாது சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-9)

## மாநாடு

யாழ்ப்பாணம்,டிசெ.5

போரூட் நிறுவனத்துக்கு உதவி வழங்கும் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான மாநாடு எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் முதன்மை விருந்தினராக போரூட் நிறுவன இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரொஜி ஹெக்கிரனெசும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-203)

# மஹிந்த விரிக்கும் சதி வலையில் இந்தியா விழுந்து விடக்கூடாது!

### எச்சரிக்கின்றார் வைகோ

கொழும்பு,டிசெ.5

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை இந்தியா முன்னின்று வழி நடத்திக் கொண்டு செல்லவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கும் யோசனை திட்டமிட்ட ஒரு சதி. அந்தச் சதிவலையில் புதுடில்லி சிக்கி விடக்கூடாதென்று எச்சரித்திருக்கிறார், இந்திய மத்திய அரசின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ.

சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட வைகோ, இலங்கையின் தற்போதைய சூழ்நிலை மற்றும் நிலைமைகள் தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை புதுடில்லியில் அண்மையில் தாம் சந்தித்தபோது விளக்கிக்கூறியுள்ளார் எனவும் தெரிவித்தார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இந்தியா முன்னின்று செயற்பட வேண்டுமென இலங்கை ஜனாதிபதி கோரியிருக்கின்றமை நிலையான சமாதானமொன்றை ஏற்படுத்தவோ அல்லது தமிழர்களுக்கு நீதியான தீர்வொன்றை வழங்குவதற்காகவோ அல்ல. சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகளை மூடுவதற்காகவே அவர் இவ்வாறான எண்ணத்தைக் கொண்டுள்ளார். இந்த சூழ்ச்சியான சதிவலையில் இந்தியா மீண்டும் விழக்கூடாது.

அமைதி முயற்சிகளை நோர்வே கிரமமாக முன்னெடுத்துச் செல்கிறது. அந்தப் பணியை அப்படியே முன்னெடுத்துச் செல்ல அனுமதித்து, அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் ஒரு பங்கையே இந்தியா வகிக்கவேண்டும். நோர்வே தரப்பினால் முன்னெடுக்கப்படும் அமைதி முயற்சிகளுக்கான ஆதரவையும் உதவியையும் இந்தியா வழங்கலாம்.

இதேபோல்தான் 1986 -87 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவைத் தலையிட வைக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. அது பேரழிவில் முடிவுற்றது என்பது பின்னர் நிரூபணமாயிற்று. இப்போதைய இலங்கை ஜனாதிபதி நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஆர்வமுள்ளவராகத் தெரியவில்லை. தமிழ்ப் பகுதிகளில் அரச ஆதரவான காலனித்துவம் பற்றி அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது குறிப்பிட்டிருந்தார். அவரின் உண்மையான மனவோட்டத்தை அது வெளிப்படுத்தியது. - என்று மேலும் கூறினார் வைகோ.

(எ-க)

# புலிகளின் கடற்படை குறித்து இந்தியா விழிப்பாக உள்ளதாம்

### அந்நாட்டின் கடற்படைத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு,டிசெ.5

விடுதலைப் புலிகளின் கடற்படை குறித்து இந்தியா மிகவும் விழிப்பாக இருக்கிறது. பிராந்தியக் கடற்பரப்பில் ஆதிக்கம் செலுத்துவதற்கான பலமான நிலையில் விடுதலைப் புலிகளின் கடற்படை இல்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ். கடற்படை தினத்தையொட்டி அவர் புதுடில்லியில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டார். அப்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கடற்புலிகள் தொடர்பில் நாம் விழிப்புடன் இருக்கிறோம். நாங்கள் செய்யவேண்டிய விடயங்களை அவர்களால் தடுத்துவிட முடியாது. சேது சமுத்திரத்தை ஊடறுத்துச் செல்லும் வணிகக் கப்பல்களை புலிகள் கடத்தக்கூடுமென்று ஓர் அச்சம் நிலவுகிறது. ஆனால், இந்தியக் கடற்படையினருக்கு அவ்வாறான ஓர் அச்சம் இல்லை.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறினால் இந்தியப் போர்க்கப்பல்கள் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு செல்வதற்கான நேரம் வெகுவாக குறையும். இப்போது போர்க் கப்பலொன்று அவ்வாறு மறுகரைக்கு செல்வதற்கு 18 முதல் 24 மணி நேரம் வரை செல்கிறது.

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால் கண்காணிப்புப் பணியை மேலும் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும். அது இலங்கைக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துமென்று தெரியாது. ஆனால், அது புலிகளுக்குத் தொல்லை தருமென்று தெரிகிறது.

- இவ்வாறு கூறினார் இந்தியக் கடற்படைத் தளபதி. (எ-க)

# அமைச்சுச் செயலர் நியமனத்தில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டனர்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவைச் செயலாளர் நியமன விவகாரத்தில் சிறுபான்மையினர் முற்றுமுழுதாக ஓரங்கட்டப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்திற்கு முன்னர் மூன்றிற்கு மேற்பட்ட தமிழர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளின் செயலாளர்களாக இருந்து வந்தனர். ஆனால், அமைச்சரவை மறுசீரமைப்பு மற்றும் வயதெல்லை ஆகிய காரணங்களினால் இம்முறை செயலாளர்கள் நியமனத்தில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.

கடந்த அமைச்சரவையில் இந்துசமய விவகார அமைச்சரின் செயலாளரான மகானந்தன் கடமையாற்றினார். இந்த அமைச்சரவை மாற்றத்துடன் அவரின் பதவி காலியானது.

அதேபோல், 60 வயதுடையவர் என்ற காரணத்திற்காக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சில் செயலாளராக கடமையாற்றிய வாமதேவன் செயலாளர் பதவியிலிருந்து தூக்கப்பட்டுள்ளார். அதேசமயம், 62 வயதுடைய இரு சிங்களவர்கள் மின்சக்தி எரிபொருள்துறை மற்றும் கல்வி ஆகிய அமைச்சுகளின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சுச் செயலாளர் நியமன விடயத்தில் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் ராமானுஜத்தை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றின் செயலாளராக்குவதற்கும் இறுதி நேர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், அது பின்னர் கைவிடப்பட்டுவிட்டது.

தற்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் இருவருக்கு மட்டுமே தமிழர்கள் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ஜெகராஜசிங்கமும், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் ராமானுஜமுமே அவர்களாவர்.

தமிழர்களுக்குச் சேவையாற்றக்கூடிய தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு போன்ற ஒன்றில் அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில் நெருக்கடி ஏற்படும் எனச் சுட்டிக்காட்டுகிறார் மூத்த அரச அதிகாரி ஒருவர். (எ-க)






நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனுடன் பேச்சு நடத்திய காட்சி. (ஐ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழ் மக்களின் விசனம் சினமாக மாறும் சூழ்நிலை

"யுத்த நிறுத்தத்துக்கு அடிப்படையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவேண்டிய எதுவித தேவையும் இப்போது இல்லை. இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக - உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் - இலங்கை அரசு செயற்படுத்தினாலேயே இரு தரப்பு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும்; வன்முறைகளும் முடிவுக்குக் கொண்டு வரப்படும்; தமிழ் மக்களும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியும். இதற்குரிய அனைத்து அம்சங்களும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன." - இப்படிச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடாகான் அம்மையாரை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியபோதே இந்த அர்த்தமுள்ள - ஆழமான - யதார்த்தமான - மெய்மை நிலையை நேரடியாகச் சுட்டிக்காட்டினார் தமிழ்ச்செல்வன்.

சுமார் நான்கு ஆண்டுகால யுத்தநிறுத்த உடன்பாடு கேள்விக்குள்ளாகும் நிலைமை உருவாகி வருகின்றது. ஆங்காங்கே வன்முறைகளும், வன்செயல்களும் வெடித்து வருகின்றன. பதற்ற நிலைமை நீடிக்கின்றது. அதிருப்தியின் உச்சத்தில் இருக்கும் தமிழர்கள் இந்த யுத்த நிறுத்தத்தால் கண்ட பயன் என்ன என்று சீறிச் சினந்து விசனிக்கும் சூழல் உருவாகி வருகின்றது.

மொத்தத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கையே இனிமேல் நின்று, நிலைத்து நீடிக்காது என்ற அச்ச நிலைமை தீவிரமடைந்து வருகின்றது.

இந்தப் பின்னணியில்தான், யுத்தநிறுத்த உடன்பாட்டை தம்பாட்டில் மறுசீரமைக்கப் போகின்றார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசுத் தரப்பினரும் அறிவித்து வருகின்றார்கள்.

அதற்குத் தக்க பதிலடியை - உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியதன் மூலம் - புலிகளின் அரசியல் பொறுப்பாளர் வழங்கியிருக்கின்றார்.

யுத்தநிறுத்த உடன்பாட்டிலுள்ள - இலங்கை அரசுக்கு விதிக்கப்பட்ட இரண்டு கடப்பாடுகளை அது முழு அளவில் நிறைவுசெய்யுமானால் - நடைமுறையில் செயற்படுத்துமானால் - தற்போதைய பதற்றநிலை தணிந்து, இயல்பான - அமைதியான - சமாதானமான - சூழல் உருவாகும்.

முதலாவதாக - யுத்த நிறுத்த உடன்பாட்டின் 1.8 ஆவது பிரிவின்படி வடக்கு - கிழக்கில், தமிழர் தாயகத்தில் உள்ள துணைப் படைகள், ஒட்டுப்படை அணிகள் ஆகியவற்றின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை முற்றாக வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

இரண்டாவதாக - உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தான் ஆக்கிரமித்த தமிழர் தாயகப் பிரதேசத்தை, அந்த மண்ணின் மைந்தர்கள் மீளக் குடியேறுவதற்குக் கையளித்து அங்கிருந்து ஆயுதப் படைகள் நிபந்தனைகளின்றி வெளியேற வேண்டும்.

இந்தத் தேவைப்பாடுகள் முழு அளவில் நிறைவு செய்யப்படுமானால், யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழ் இது தொடர்பாகத் தனக்குரிய கடப்பாடுகளை இலங்கை அரசு முற்றாக நடைமுறைப்படுத்துமானால், வன்முறைகள் தானாகவே முடிவுக்கு வந்துவிடும், பதற்றநிலை அகன்றுவிடும். இயல்பு நிலை ஸ்திரமாகும்.

ஆனால், இந்த இரண்டு விடயங்களையுமே வேண்டுமென்றே செய்யாமல் இழுத்தடிக்கிறது அரசுத் தரப்பு.

ஒருபுறம் ஒட்டுப்படைகளை கட்டவிழ்த்துவிட்டு தமிழர் தாயகத்தை ரணகளமாக்கும் சதிச் செயலை அரச இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு முன்னெடுக்கிறது.

மறுபுறம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தான் ஆக்கிரமித்த தமிழர் தாயக மண்ணை விட்டுக் கொடேன் என்று அரசுத் தலைமை பிடிவாதம் பிடிக்கின்றது.

இரு தசாப்தகால யுத்தத்தால் சமூக, பொருளாதார, வாழ்வியல் அடிப்படையில் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்து அகதி முகாம்களில் அன்றாட வாழ்வுக்கு வழியின்றி அல்லற்படுகின்றார்கள். அவர்களது தாயக மண்ணை, பாரம்பரிய பூமியை அவர்களிடம் மீள ஒப்படைத்தால்தான் தமது அன்றாட ஜீவனோபாயத்தை அவர்கள் தேடிக்கொள்ள முடியும்.

இப்படி அவர்களின் வாழ்விடங்களை அரச படைகள் பலவந்தமாக ஆக்கிரமித்து நிற்பதால் அவர்களின் விசனம், சினமாக மாறும் நிலைமை ஏற்பட்டுவருகிறது. அது அமைதி நிலைக்கு - சமாதான சூழலுக்கு - ஆப்பு வைப்பதாக இருப்பது ஒருபுறமிருக்க, இவ்வாறு வலுக்கட்டாயமாக தமிழர்களின் குடியிருப்பு மற்றும் விவசாயப் பிரதேசங்களை பறித்து வைத்திருப்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை திட்டமிட்டுப் பறிக்கும் 'அரச பயங்கரவாத'ச் செயலாகும்.

இதனைச் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளருக்கு நன்கு எடுத்து விளக்கியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

அரச பயங்கரவாதப் போக்கைக் கண்டுகொள்ளாமல், தமிழர் தரப்பின் விடுதலை இயக்கத்துக்கு எதிராக - ஒரு தலைப்பட்சமான - குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் சில சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் போலல்லாமல் நடுநிலையாகச் செயற்படக் கூடியது சர்வதேச மன்னிப்புச் சபை என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு உண்டு.

அத்தகைய அமைப்பு ஒட்டுப்படைகள் விடயத்திலும், தமிழர் தாயகத்தை அரசபடைகள் ஆக்கிரமித்திருக்கும் வல்வந்த நடவடிக்கை விடயத்திலும் நீதியான ஒரு நிலைப்பாட்டை - நடுநிலையான ஓர் அறிக்கையை - வெளியிட்டு உண்மையைப் பகிரங்கப்படுத்தும் எனத் தமிழர்கள் நம்புகிறார்கள்.

தமிழ்ச்செல்வனின் விளக்கம் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகத்துக்கு உண்மை நிலையைப் புரிய வைத்து தெளிவுபடுத்தியிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

# படிவங்கள் தவறாகப் பூர்த்திசெய்ததால் சமுர்த்தி முத்திரை வழங்கல் தாமதம்!

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி முத்திரை வழங்குவதற்கென மக்களிடம் கொடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் 16 ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் தவறாகப் பூர்த்திசெய்யப்பட்டமையால் அவர்களுக்கான முத்திரைகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு தற்போது 8 ஆயிரத்து 500 பேருக்கான முத்திரைகள் கிடைத்துள்ளன. அவை விரைவில் உரியவர்களுக்கு வழங்கப்படும்.

சமுர்த்தி படிவங்களைப் பூர்த்திசெய்து கொடுத்தும் முத்திரைகள் கிடைக்காதவர்கள் பிரதேச செயலகத்தால் மேன்முறையீடு செய்யமுடியும்.

இந்த முறையீடுகளை ஆராய்வதற்கென கிராமமட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் சபைகள் அமைக்கப்பட்டு, அதன் உறுப்பினர்களுக்கு அதற்குரிய பயிற்சி வகுப்புகளும் விரைவில் நடத்தப்படவுள்ளன.

சமுர்த்தி முத்திரைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு மீண்டும் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கும் முத்திரைகள் வழங்கப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-203-204)

# சின்னவெங்காயம், வெண்டி,கீரை புதிய இனங்கள் இம்முறை அறிமுகம்

யாழ். மாவட்டத்தின் சீதோஷண நிலைமைக்கு ஏற்ப விளைச்சல் தரக்கூடிய சின்னவெங்காயம், வெண்டி, கீரை வகைகள் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட இந்தப் புதிய இனங்கள் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏ.ஆர்.எஸ்-1 இனச் சின்ன வெங்காயம், ரீ.வி.-6, ரி.வி.-7, ரீ.வி.-8 ரக வெண்டி இனங்கள் வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகாமல் மாரி, கோடை இரு காலப் பகுதியிலும் நல்ல விளைச்சலைத் தரக்கூடியவை.

அத்துடன், மக்களால் விரும்பிப் பயன்படுத்தப்படும் பால் வெண்டி இனத்தைச் சேர்ந்தவை என்று புத்தூர் கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் எம்.யோகநாதன் தெரிவித்தார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கீரை இனங்கள் சுமார் 20-22 நாள்களில் அறுவடை செய்யக்கூடியவை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)

# திருப்திகரமான சேவையை வழங்க வடபகுதிக்கு பஸ்கள் கிடைக்குமா?

## போக்குவரத்துச்சபை அதிகாரிகள் காத்திருப்பு

கோண்டாவில்,டிசெ.5

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் யாழ். மாவட்ட பஸ் டிப்போக்கள் திருப்திகரமான பயணிகள் பேருந்து சேவையை மேற்கொள்வதற்குப் போதிய பேருந்துகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பதினைந்து, இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கடந்த பேருந்துகளே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அடிக்கடி இந்தப் பேருந்துகள் பழுதடைந்து போவதாகவும், அத்தகைய பேருந்துகள் யாழ். சாலை பொறியியலாளர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த சேவையினால் மீளவும் திருத்தியமைக்கப்பட்டு, பயணிகள் சேவைக்கு விடப்படுகின்றன என்றும் இலங்கை போக்குவரத்து சபை யாழ்.சாலை முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

இதனிடையே இந்த நிலையினைக் கருத்திற்கொண்டு யாழ். சாலைக்கு உடனடியாக ஆகக்குறைந்தது இருபத்தைந்து பேருந்துகளையாவது பெற்றுத் தரவேண்டும் என்று யாழ். அரச அதிபர் போக்குவரத்துச் சபையின் தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து இம்மாதம் 15ஆம் திகதிக்குப்பின் ஒரு குறித்த எண்ணிக்கையான பேருந்துகள் யாழ். சாலைக்கு கிடைக்கும் சாத்தியம் இருப்பதாகக் கூறப்பட்டது.

இருந்தும் ஓரளவு திருப்திகரமான பயணிகள் சேவையில் ஈடுபட குறைந்தது 50 பேருந்துகள் வரையாவது தேவைப்படுவதாக முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஆழிப்பேரலை நிவாரணப்பணியில் ஈடுபடுத்துவதற்கு என்று இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட பேருந்துகள் தற்பொழுது தென்னிலங்கையில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவருகின்றன என்று அந்தப் பேருந்துகளில் எவையும் வடபகுதிக்கு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடைசியாக 2001ஆம் ஆண்டு யாழ். சாலைக்கு 10 பேருந்துகள் வழங்கப்பட்டன. அதன்பின்னர் எந்த பேருந்துகளும் யாழ்.சாலைக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-49)

## கடமையை சரிவர நிறைவேற்றத் தவறிய

# பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பம்

கொழும்பு,டிசெ.5

கடமைகளை முறையாக நிறைவேற்றாத அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பொலீஸ் தலைமையகத்தின் நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளது.

பொலீஸ்மா அதிபரின் தனிப்பட்ட கண்காணிப்பின்கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று நடவடிக்கைக் குழுவின் தலைவரான பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

பொலீஸ் நடவடிக்கைக்குழு அமைக்கப்பட்டு 8 மாதகாலத்துக்குள் பொலீஸ் சேவையை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைக்கப் பல செயலமர்வுகள் நடத்தப்பட்டன. 2003ஆம் ஆண்டு சுவீடன் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு ஏற்ப இந்த புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

பிரதிப் பொலீஸ்மா அதிபருடன் 6 சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர்களும் நடவடிக்கைக் குழுவில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளாகக் கடமையாற்றுகின்றனர். (ஐ-8)

# ஒழுங்காக வேலை செய்ய முடியாவிட்டால் விலகி மற்றவர்களுக்கு இடம்கொடுங்கள்!

## ஊழியர்களிடம் போக்குவரத்து அமைச்சர் காட்டம்

பொதுமக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு ஒழுங்கான சேவைகளை வழங்கத் தவறும் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். முறையாகப் பணியாற்ற முடியாதவர்கள், முறையாக வேலை செய்பவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டுத் தாமாகவே விலகிக் கொள்ளலாம் என போக்குவரத்து, பெற்றோலிய கனியவள அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சுப் பொறுப்பை ஏற்றபின் அமைச்சர் பௌஸி இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் ரயில்வே திணைக்கள அதிகாரிகளையும் ஊழியர்களையும் சந்தித்துப் பேசினார்.

"ஏற்கனவே, நான் இந்த அமைச்சுப் பொறுப்பில் இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே அப்படியே இருக்கின்றன. அவை விட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

அடிமட்டத்திலிருந்து அனைத்துத் தரத்திலான ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஒத்துழைக்க முடியாதவர்கள் தாமாகவே விலகிக் கொள்வதே மேலானது. - என்றும் அமைச்சர் கூறினார்.

இப்பொழுதும்கூட 2000 முதல் 3000 வரையிலான பஸ்கள் டிப்போக்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் உடனடியாக மறுசீரமைத்து பாவனைக்கு விடவேண்டும். அதற்கமைய திருத்தப் பணிகளை தாமதமின்றி ஆரம்பிக்கவேண்டும். - என அமைச்சர் உத்தரவிட்டார்.

இதனை செயற்படுத்துவதற்கு ஏதுவாக இப்பொழுது கடமையில் இருக்கும் 130 பொறியியலாளர்களுக்கு மேலதிகமாக 15 பொறியியலாளர்களை பணிக்கு சேர்த்துக் கொள்ளவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்து சேவைகளை மேலும் சீரமைக்கும் வகையில் புதிதாக 130 சாரதிகளும் 130 நடத்துநர்களும் ஜனவரி மாதம் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அமைச்சர் பௌஸி குறிப்பிட்டார். (ஐ-க)

## நாளை

கார்த்திகை 21
செவ்வாய்க்கிழமை
06.12.2005
திதி: பஞ்சமி
பிற்பகல் : 12.08 வரை
நட்சத்திரம் : திருவோணம்
மாலை : 05.32 வரை
சுபநேரம்: 10.47 - 12.17
ராகுகாலம்: 03.17 - 04.47
(யாவும் பழைய நேரப்படி)


## உதயவாக்கு

காலத்தின் நிலையை அறிந்து கொள்காலமே உன் உயிர்; அதனை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வது போலாகும்.

*- ஜேம்ஸ் லேன்.*







யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் வெள்ளிவிழா கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி அதிமேற்றிராணியார் மரியோ செனாரி ஆண்டகை ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளையும் திருமறைக் கலாமன்ற மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் படங்களில் காணலாம்.

படங்கள் :பகீரதன்




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வரணி மகாவித்தியாலய மாணவியும் கந்தசாமி - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வியுமாகிய

**செல்வி நிஷானி**

2005 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று, பாடசாலையில் முதலாம் இடத்தையும் பெற்று சித்தியடைந்ததையிட்டு இவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். இவரை வழிநடத்திய செல்வி க.இரத்தினமலர், திரு. சி.பிரபாகரன் ஆசிரியர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வரணி ம.வி.அருகில்,
கரம்பைக் குறிச்சி,
வரணி.
(43594) (54-34-45)

வாழ்த்துவோர்.
அப்பா, அம்மா, சகோதரர்.


# உதவிப்பணக் கொடுப்பனவு

வலி. தென் மேற்கு,டிசெ.5

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுப்வர்களுக்கு டிசெம்பர் மாதக் கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் அந்த அந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இப் பிரிவிலுள்ள புற்று நோயாளர்கள், காச நோயாளர்கள்,தொழு நோயாளர்கள் மற்றும் மாதாந்தப் பொதுசன உதவிப் பணத்தை பெற்று வருபவர்கள் ஆகியோர் இக்கொடுப்பனவை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது தபாலகங்களில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

# தேர்ச்சி அறிக்கை வழங்கும் நிகழ்வு

கைதடி, டிசெ. 5

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 2005 ஆம் ஆண்டுக்கான ஆண்டிறுதித் தேர்வுக்குரியதேர்ச்சி அறிக்கை வழங்கும் வைபவம் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு வளர்மதி கல்வி நிலையத்தில் கல்விக் கழகப் பொறுப்பாளர் ச. கிருஸ்ணன் தலைமையிலே இடம் பெறவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை கல்வி பயிலும் மாணவர்கள் சகலருக்கும் தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட உள்ளது.

மாணவர்களுக்கான தேர்ச்சிஅறிக்கை வழங்கும் வைபத்தை வளர்மதி கல்விக் கழகம் ஒவ்வொரு வருடமும் நடத்தி வரு கின்றது. (ஐ-75)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யங் கென்றீசியன் விளையாட்டுக் கழகம் மாவட்டரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* இன்று பி.ப. 3.30 மணி - திருநகர் பாரதி வி.க. எதிர் அராலி பாரதி வி.க., பி.ப. 4.30 மணி - மாதகல் சென்.தோமஸ் இளைஞர் (கபிலம்) வி.க.எதிர் வல்வை வி.க.

நாளை பி.ப. 3.30மணி நவிண்டில்கலை மதி வி.க. எதிர் புத்தூர் எல்லாளன் வி.க., பி.ப. 4.30 மணி - மயிலங்காடு ஞானகலா வி.க. எதிர் கொற்றாவத்தை சிவானந்தா வி.க. (3-190)


## றேடியன்ற்

புங்கன்குளம், அரியாலை

* புதியகல்வியாண்டு ஆரம்பம்
* இன்று (05-12-2005) திங்கள் பிற்பகல் 4மணி
* தரம் 6 முதல் O/L, A/L வரை.

(43603)


# வீட்டின் ஜன்னலைப் பிரித்து அச்சுவேலி தெற்கில் திருட்டு

அச்சுவேலி தெற்கிலுள்ள வீடு ஒன்றினுள் ஜன்னல் கம்பிகளை வளைத்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்து தங்க நகைகள், பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியில் உள்ள ஒரு வீட்டி லேயே கடந்த வியாழன் இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. உலக்கையைப் பயன்படுத்தி கம்பிகளை வளைத்து ஜன்னலூடாக நுழைந்த திருடர்கள் வீட்டில் நீண்டநேரம் தங்கிநின்று பொருள்களை அபகரித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

வீட்டில் நின்ற துவிச்சக்கர வண்டி ஒன்றையும் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டு தொடர்பாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டி ருக்கிறது. (ஐ-11)


## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
31 - 01 - 1949

மறைவு
05 - 12 - 1998

**திருமதி ராணி ஜெகசோதி**

(ஆசிரியர், சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை)

*எங்கள் குடும்பத்தின் மூத்த செல்வமே*
*சீரோடு சிறப்பும் பேரோடு பெருவாழ்வும்*
*பெற்று நீ வாழ நாம் பெருமகிழ் வோடிருந்தோம்*
*பெற்றோரும் உற்ற துணைவரும் உன் பிள்ளைகளும்*
*ஏங்கியழ எங்கம்மா சென்றாய்*
*என்நாளும் உன் இடம் வெற்றிடமாய் இருக்கிறதே*
*இன்னொரு தடவை எங்களிடம் வரமாட்டாயா?*

198, சென் .பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
(43602) (54-34-45)

- குடும்பத்தினர் -



## மரண அறிவித்தல்

**திருமதி ஈஸ்வரி குணபாலசிங்கம்**



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி குணபாலசிங்கம் அவர்கள் நேற்று (04-12-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் குணபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் வீரபாகு-சின்னம்மா தம்பதியரின் மகளும் பொன்னையா-நாகம்மா தம்பதியரின் மருமகளும் பாஸ்கரன், பாலேந்திரன், ஜெயசுதா, பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும். அமரர்களானபூரணம், ஐயாத்துரை, ராசமணிமுருகையா மற்றும் பூமணி, குமாரசாமி செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் அமரர் கோபாலசிங்கம் மற்றும் கணேசலிங்கம், கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் யோகமலரின் மாமியாரும் பிரவீனா, பிரசாந், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-12-2005) திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(43601) (54-34-45)

தகவல்:
குடும்பத்தினர்.



## வெளிநாட்டு வேலை வாய்ப்பு
## டோகா, கட்டார், டுபாய்

- பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
- களஞ்சியப் பாதுகாவலர் (STORE KEEPER)
- சமையல் செய்பவர் (COOK ASIAN / SOUTH INDIAN)
- இலக்ரீசியன் (HOUSE ELECTRICANS)
- துப்புரவு செய்பவர்கள் (CLEANING LABOURERS)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

- மரத்தளபாடம் செய்பவர்கள்
- உதிரிப்பாக உற்பத்தியாளர்கள்
- உற்பத்தி இயக்குநர்கள்
- துப்புரவுத் தொழிலாளர்கள்
- தையல் வேலை செய்பவர்கள்

மேற் குறிப்பிட்ட நாடுகளுக்கு குறுகிய காலத்தில் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**RAINBOW TRAVELS & TOURS**

32-1 / 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237 , 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)

குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.



## INTERNATIONAL SCHOOL - MANIPAY
## சர்வதேச கல்லூரி - மானிப்பாய்.

Interviews
For Admission Jan. 2006
நேர்முகப்பரீட்சை
அனுமதி தை - 2006

பாலர் வகுப்பு முதல் 7ஆம் வகுப்பு வரை நேர்முகப் பரீட்சை
Montessori to Grade 7 Interviews

5.12.2005 to 07.12.2005 at 8-30 a.m. on wards

Parents Accompany your Child
பெற்றோர் பிள்ளைகளைக் கூட்டி வாருங்கள்

Few More Vacancies in Grades 3+4
3ஆம், 4ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வெற்றிடமுண்டு.

Vacancies
வெற்றிடங்கள்


i. Graduate Teachers / Peons / Nannies
பட்டதாரிகள்/காரியாலய வேலையாள்கள் / பிள்ளைகள் பராமரிப்பு
ii. Administrator / நிர்வாகி
iii. Matron / பிள்ளைகள் விடுதி பராமரிப்பவர்.
IV. Cooks / சமயல் பணி

T.P: 2222659, 4591983

Director / நிர்வாகி
Humedica Lanka,
Sangarapillai Road,
Manipay.

கியுமெடிக்கா இலங்கை
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

(43597) (54-34-45)



1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பல்லவராயன் கட்டு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை நிரந்தரக் கட்டடங்கள் ஏதுமின்றி, இதரவசதிகள் எவையும்இன்றி இயங்கிவருகிறது. இப்பாடசாலையின் ஒருபகுதியையே படத்தில் காண்கிறீர்கள். பூநகரி பிரதேச செயலர் பிரிவில் முதல் ஆரம்பிக்கப்பட்ட ஒரே ஒரு இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (3-415)

## கடும் மழையால் வகுப்பறை கொட்டில் சாய்ந்தது

ஊர்காவற்றுறை,டிசெ 5

வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் பெய்த மழை காரணமாக 120 அடி நீளமான வகுப்பறைக் கொட்டில் சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த வகுப்பறைக் கொட்டில் அண்மையிலேயே புதிதாக அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே போதியளவு இடவசதியின்றி இயங்கி வரும் இப்பாடசாலையில் இந்த வகுப்பறைக் கொட்டில் சரிந்து வீழ்ந்ததனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-16)

## முழங்காவிலில் திருட்டுக்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி,டிசெ.5

முழங்காவில் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜெயபுரம் தெற்கில் வசிக்கும் கனகசபாபதி - யமுனாகரன் என்பவர் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிக்கொண்டு சென்றபோது அதில் பெற்றோல் இல்லாததால் தொடர்ந்து கொண்டுசெல்லமுடியாத திருடர் அதனை அக்கராயனில் கைவிட்டுச்சென்றுள்ளனர்.

இதேவேளை, ஜெயபுரத்திலுள்ள வீடொன்றில் உறக்கத்திலிருந்த பெண்மணியின் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியபோது திருடன் அணிந்திருந்த கைக்கடிகாரம் தவறி விழுந்துவிட்டது. அதை சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் எடுத்து காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பாக முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. (3-410-291)

# வண்டிக்கட்டுக்குளம் பெருக்கெடுப்பு 24 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு!

பரந்தன்,டிசெ.5

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாண்டியன் குளம் அம்பாள்புரம் கிராமத்திலுள்ள வண்டிக்கட்டுக்குளம் உடைப்பெடுத்துள்ளதால் அப்பகுதி விவசாய நிலம் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வண்டிக்குளத்தின் பகுதியில் சுமார் 24 ஏக்கர் நிலத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு அவை விளைந்துவரும் பருவத்திலேயே இக்குளம் உடைப்பெடுத்துள்ளது. இதனால், குளத்து நீர் முற்றாக வெளியேறி நெற்பயிர்களை நாசம் செய்துள்ளன.

நெற்பயிர்கள் மட்டுமன்றி மரக்கறிப் பயிர்கள், தானியப்பயிர்கள் மற்றும் கிழங்குப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்திகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் கி.அமலன் தெரிவித்தார். (3-410-352)

## துணுக்காய் பகுதியில் பெற்றோர் கௌரவிப்பு

துணுக்காய் பிரதேசத்திலுள்ள ஐயங்கன் கிராமத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ஐயங்கன் குளம் வலயப் பொறுப்பாளர் புரட்சி நிலவனும், தமிழீழத் தேசியக் கொடியினை ஐயங்கன் குளம் திலீபன் மருத்துவ சேவையைச் சேர்ந்த கதிர்ச்செல்வியும் ஏற்றினர்.

நினைவுரைகளை ஐயங்கன்குளம் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர் புண்ணியமூர்த்தி, ஐயங்கன்குளம் மாவீரர் செயற்பாட்டுக் குழுச் பொருளாளர் மோகனதாஸ், பாடசாலை ஆசிரியர் சற்குணநாதன் மற்றும் புரட்சி நிலவன் ஆகியோர் வழங்கினர். (3-410-352)



ஜெயபுரம் வடக்குப் பகுதியில் உள்ள ஜே.ஆனந்தராசா என்பவரது வளவில் கோழிஒன்றை மலைப்பாம்பு பிடித்துவிழுங்கியபோது எடுக்கப்பட்ட படம்.
(படம்:- பிரசாத்-ஜெயபுரம்)

## இழைய வளர்ப்பு மூலம் நல்லின வாழை உற்பத்தி

### மன்னாரில் பரீட்சார்த்த முயற்சி

மன்னார்,டிசெ.5

மன்னார் மாவட்டத்தில் இழைய வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக்குட்டிகள் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

பொருண்மிய மதியுரையகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய பயிற்சித்திட்டத்தின் கீழ் கெயர் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த நவீன முறையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டன.

ஒரு பயனாளிக்கு 50 வாழைக்குட்டிகள் வீதம் மூன்று பயனாளிகளுக்கு சுமார் 150 வாழைக்குட்டிகள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. (3-410)

## மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு ஐந்து ஆயிரம் மரக்கன்றுகள்

முல்லைத்தீவு,டிசெ.5

மாவீரர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தென்னங்கன்றுகள். வழங்கப்பட்டன.

லண்டன் சஸ்ரேயின், ரிச்.யு.எஸ்.ஏ. **(TECH.U.S.A)** ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட இத் தென்னங்கன்றுகள் அளம்பல், ஆலங்குளம், வன்னிவிளாங்குளம் மற்றும் முள்ளியவளை கோடாலிக்கல்லு ஆகிய துயிலும் இல்லங்களுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை, தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு முல்லை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் முத்தையன்கட்டு வலது கரைப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மரக்கடச்சல் இயந்திரமும் 12ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகளும் அதற்கான கூடுகளும் வழங்கப்பட்டுள்ளன என பொருண்மிய மதியுரையகத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-410)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# கள்ளப்பாடு கிராமப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் விநியோகம்

### சுயதொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை

முல்லைத்தீவு,டிசெ 5

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கள்ளப்பாடு வடக்கு கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.


ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொலன்ட் ஸ்ரிச்றிங் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் இவ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் கள்ளப்பாடு மாதர் சங்கத் தலைவி திருமதி ஜெயற் ஜெயராணி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஸ்ரிச்றிங் நிறுவனப் பணிப்பாளர் இந்திரன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்துரைகளை திட்டமிடற் பிரிவைச் சேர்ந்த யாழமுதன், முல்லைத்தீவு ஆழிப்பேரலை வேலைத்திட்ட விசேட பணிப்பாளர் றெஜி மற்றும் ஸ்ரிச்றிங் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்களை திருமதி ஜெயமாலினி இந்திரன் உட்பட பலரும் வழங்கினர்.

இந்நிகழ்வில் கருத்துரை வழங்கிய ஸ்ரிச்றிங் நிறுவனப் பணிப்பாளர் இந்திரன் உரையாற்றும் போது தெரிவித்தாவது:

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பெண்களுள் சிலருக்கு சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சரியாகப் பயன்படுத்தி பயனாளிகள் தமது சுய பொருளாதாரத்தை விருத்தி செய்ய முன் வரவேண்டும். அவர்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகளைப் பொறுத்தே எதிர்காலத்தில் எமது நிறுவனத்தின் மூலம் மேலும் உதவிகள் வழங்க முடியும் என்றார். (3-410)



கடந்த மாதம் ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்ட மல்லாவி, வளநகர் பகுதி யிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கு மக்கள் காத்திருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்: மல்லாவிச் செய்தியாளர்)

# அராஜக நடவடிக்கைகள் தொடரின் மக்கள் ஆயுதம் ஏந்தும் நிலைஏற்படும்!

## கோப்பாய் பொது அமைப்புகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.5

இராணுவமும் தமிழ்த்தேச விரோதக் குழுக்களும் உடனடியாகத் தமது அராஜகச் செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். அன்றேல், மக்கள் திரண்டெழுந்து ஆயுதம் ஏந்தி தக்க பதில் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது கோப்பாய்ப் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம்.

நீர்வேலியில் அப்பாவி இளைஞர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மேற்படி ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தி நிலை கொண்டிருக்கும் சிங்கள அரச படைகளினதும், அவர்களுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் தேசவிரோத கும்பல்களினதும் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தமிழ்மண் பற்றாளர்களையும் ஆதரவாளர்களையும் எழுச்சி நிகழ்வுகளில் முன்நின்று செயற்படுபவர்களையும் கல்விமான்களையும் தமிழ்மண்மீது பற்றுக்கொண்டு போராட்டத்துக்கு உந்துசக்தியாக விளங்கும் பொது மக்களையும் இலக்கு வைத்து மிகக் கொடூரமான தாக்குதல்களை அண்மைக் காலங்களில் அரங்கேற்றி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது நீர்வேலிப் பகுதியில் அலங்கார வேலைகளை முன்னின்று நடத்திய இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவப் புலனாய்வு பிரிவினராலும்அதனுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்த் தேச விரோதக் கும்பல்களினாலும் சுடப்பட்டு படுகாயமடைந்தது பலரும் அறிந்த விடயம். மீண்டும் இவர்கள் தமது அராஜகத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். 01.12.2005 அன்று நீர்வேலிப் பகுதியில் தமது அன்றாடக் கடமைகள் தொடர்பாக நண்பர்களுடன் உரையாடிக்கொண்டு இருந்த அப்பாவி இளைஞர்கள்மீது சிறிலங்கா கூலிப்படையினரும் அவர்களுடன் சேர்ந்த தமிழ்த் தேச விரோத கும்பல்களும் இணைந்து மிகவும் மிலேச்சத்தனமாக துப்பாக்கித் தாக்குதலை நடத்தினார்கள். இதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள். இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்கள் போராட்டத்தின்பால் ஈர்க்கப்படுவதைத் தடுக்கலாம் என்றும் தமிழ்மக்களை அடிமைப்படுத்தி தமிழர்தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்றும் சிறிலங்கா அரசு நப்பாசை கொண்டுள்ளது. இந்த அற்பஆசை ஒரு போதும் நிறைவேறமாட்டாது என்பதை எதிரியவனுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

சிறிலங்கா இராணுவமே! தமிழ் தேச விரோதக் குழுக்களே! உங்களின் அராஜகத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் மக்கள் திரண்டெழுந்து உங்களுக்கு எதிராகக் கைகளில் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் இதற்காக எமது விடுதலைப் போராட்டத்தின் உந்துசக்தியாக உள்ள மக்கள் படைக்கட்டுமானம் தங்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதையும் தங்களுக்கு புரியவைக்கும் காலம் வெகு தூரமில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு இயன் மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு கடந்த முதலாம் திகதி முதல் இயன் மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இயன் மருத்துவ டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த செல்வி காஞ்சனா சிவபாலனுக்கே வடக்கு- கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த முதலாம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-410)

## திட்ட வரைவுகள் சமர்ப்பிக்க அறிவுறுத்து

குருநகர்,டிசெ.5

2006ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் பிரதேச ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான திட்ட வரைபுகளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமக்குத் தெரியப்படுத்துமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஸ் யாழ்ப்பாணத்தில் இயங்கும் திணைக்களத் தலைவர்களைக் கோரியுள்ளார். (ஐ-51)

## யாழ்.வலயத்தின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.கல்வி வலயத்தினால் நடத்தப்படும் விளையாட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-190)

## தென்மராட்சியில் ஆசிரியர்களுக்கு சேவை முன் பயிற்சி

தென்மராட்சி, டிசெ. 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

நாளை மறுதினம் 7 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை பத்து நாள்கள் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் வகுப்புகள் நடைபெறவுள்ளது.

வலயப் பாடசாலைகளில் நியமனம் பெற்றுள்ள 40 ஆசிரியர்களையும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பயிற்சி வழங்குதல் தொடர்பான திட்டமிடல் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி ஆசிரிய நிலையத்தில் நடைபெறுமெனவும் புதிதாக நியமனம் பெற்ற அனைத்து ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-117)


### வாகன விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள செல்மொடல் 52- வான் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0777328219.

(சி/46614)(42-16-46)



### 03.12.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1664

வெற்றி எண்கள்: 09 10 54 62

சுப்பர் எண்: 15

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,73,70,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,73,70,500/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | [illegible] | 10,00,000/- | 30,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 430 | 1,000/- | 4,30,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,381 | 500/- | 6,90,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,586 | 40/- | 8,23,400/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,512 | 20/- | 3,30,240/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,55,624 | 15/- | 38,34,740/- |
| | | மொத்தம் | 74,33,880/- |
| [illegible] | 5 | 1,00,000/- | [illegible] |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | [illegible] |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 1,81,54,150/-

| | |
|---|---|
| [illegible] | 300746237-3-37 |
| [illegible] | 300742607-1-79 |
| [illegible] | 300751275-5-35 |
| [illegible] | 300740757-8-93 |
| [illegible] | 300741228-1-07 |



### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 734 |
|---|---|
| திகதி | 02-12-2005 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 5842461-5856582

வெற்றி இலக்கங்கள்: 25 26 39 50

லக்கினம்: மேடம்

ஜக்பொட் பரிசு ரூபா. 10,00,000/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 16,98,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,12,699 | 10/- | 31,26,990/- |
| 2.இலக்கங்கள் | 28,818 | 20/- | 5,76,360/- |
| 1.இல லக்கினம் | 28,492 | 30/- | 8,54,760/- |
| 2.இல லக்கினம் | 2,540 | 100/- | 2,54,000/- |
| 3.இலக்கங்கள் | 777 | 500/- | 3,88,500/- |
| 3.இல லக்கினம் | 67 | 5,000/- | 3,35,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 72,35,320/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 82,87,670/- |

| | |
|---|---|
| கேகாலை | 5847271-5-88 |
| கம்பஹா | 5853788-1-03 |
| கொழும்பு | 5848005-2-54 |
| அம்பாறை | 5846044-2-60 |
| கொழும்பு | 5851652-6-54 |

அபிவிருத்தி லொத்தர் சபை


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி இரத்தினசிங்கம் பொன்னம்மா

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை முன்னாள் அதிபர் *த.அழகரத்தினம்* அவர்களின் அன்பு மாமியார் திருமதி **இரத்தினசிங்கம் பொன்னம்மா** அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,** (43578)(19-39-45)
**யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில்.**

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கார்த்திகேசு குமாரசாமி

ஆவரங்கால் மேற்கு, வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குமாரசாமி அவர்கள் 03-12-2005 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் தனலட்சுமி, பரமேஸ்வரன், புவலட்சுமி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும் தேவராசா, கனிமொழி, கோபாலன், சுபாசினி ஆகியோரின் மாமனாரும் வமிர்த்தா, தேனுகா, ராஜதேவ், கவிதா,பகிரதி,கிருஸ்ணகாந்தன், கஜிபன், ஜனனி, யாழினி, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-12-2005) திங்கட்கிழமை பி.ப. 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருதடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆவரங்கால்.** (43587)(26-19-39-45)

தகவல்:
**தேவராசா தனலட்சுமி** *(மகள்).*

### டாக்டர் தம்பையா அப்பாத்துரை



சித்தன்கேணி, சிவன் கோயிலடியைச் சேர்ந்த டாக்டர் தம்பையா அப்பாத்துரை 02-12-2005 வெள்ளிக்கிழமை இந்தியாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் தம்பையா- முத்தம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான தபால் அதிபர் நாகலிங்கம்- திலகவதி தம்பதியரின் மூத்த மருமகனும் செல்வதியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (கனடா), திவாகரன் (கனடா), சிறீகரன் (கனடா), சிவகரன் (கனடா), மீனாம்பாள் (இந்தியா), வசிகரன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கங்காதேவி, மேகலா, ஜனனி, அன்பழகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அமுதவல்லி, பத்மநாதன், செல்வரட்ணம், சிவபாதசுந்தரம், புஸ்பராணி, சற்குணம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் விவேகானந்தன், சர்வேஸ்வரி, இராமநாதன் (அமெரிக்கா), பரமேஸ்வரி, கனகாம்பிகை, சண்முகநாதன் ஆகியோரின் அருமை மைத்துனரும் நிருஜன், அனித்தா, கஜன், தாரணி, தர்சிகன், மதுரா, சாஸ்றூஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன் கோயிலடி,**
**சித்தன்கேணி.** (43591)(26-19-39-45)

தகவல்:
**மனைவி** *(இந்தியா),*
**பிள்ளைகள்** *(கனடா).*

# நாவலருக்கு கனடாவில் உருவச்சிலை நன்றி மறவாத மாபெரும் கைங்கரியம்



*ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தெற்கு வீதியில் நாவலர் சபை அமைத்த மணிமண்டபம் அமைந்துள்ள காணியின் பெயர் அம்மையினான் வளவு என்பதாகும். 5 பரப்பு 12 குழி கொண்ட இக்காணியை கார்த்திகேய ஐயர் என்பவரிடம் இருந்து 1874 ஆம் ஆண்டு நாவலர் விலைக்குப் பெற்றார். இக்காணி நாவலரின் கொள்விலையும் ஆட்சியுமாகும். அரசு பாடசாலைகளைச் சுவீகரித்த காரணத்தினால் நாவலர் தர்மச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கமாக யாழ்ப்பாணக் கல்வி அதிபர் தலைமையில் நாவலர் தர்மகர்த்தா சபை உருவாக்கப்பட்டது. குறித்த சபையே நாவலர் தர்மங்களைப் பேணுவதுடன் நாவலர் நோக்கங்களையும் நிறைவேற்றி வருகிறது.

சென்னையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றபொழுது அங்கு பெரியவர்களைக் கௌரவிக்கும் நோக்கமாகச் சிலைகள் நிறுவப்பட்டன. இலங்கையிலும் இந்தியாவிலும் நன்கு சைவத்தமிழ்த் தொண்டாற்றிய நாவலருக்கு சிலை நிறுவப்படவில்லை. இதை நேரிற் கண்ட ஈழம் வாழ் தமிழ் மக்கள் மனம் வருந்தினார்கள். நாட்டு மக்கள் ஒன்று கூடி ஆலோசித்து எங்கள் நாட்டில் நாவலர் சிலையை நிறுவவேண்டும் என்று தீர்மானித்தார்கள். குறித்த தீர்மானத்தின் பிரதிபலிப்பாகவே நாவலர் சபை உருவாக்கப்பட்டது.

நாவலர் சபையினர், நாவலரின் சிலை வடிப்பு முயற்சியைக் கொழும்பிலேயே ஆரம்பித்தனர். தென்னகத்தில் இருந்து அழைக்கப்பட்டவரான சிற்பி மணி நாவலர் பெருமானின் சிலையை அழகுபட உருவாக்கினார். சிலைவேலை பூர்த்தியாகும் தறுவாயில் நாவலர் சிலையை யாழ்ப்பாணத்தில் எங்கு நிறுவுவது என்பது பற்றி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்த நாவலர் சபை ஒழுங்கு செய்தது. நான்கு திசைகளில் இருந்தும் அந்தக் கூட்டத்துக்கு அறிஞர்கள் பலர் வந்திருந்தனர், சிலை நிறுவுவதற்கு மாநகர சபை முன்றில் பொருத்தமானது; மத்திய கல்லூரி முகப்பு பொருத்தமானது; கீரிமலை பொருத்தமானது என்று பலரும் பலவாறான கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

"நல்லூர்க் கந்தசாமி கோயிலின் தெற்கு வீதியில் நாவலருக்குச் சொந்தமான அம்மையினான் வளவில் நாவலரது சிலையை நிறுவுவதே பொருத்தமானது" என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார். பண்டிதமணியினது ஆலோசனை பரவலாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாவலர் சபை கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு குறித்த நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று அங்கு சிலையை நிறுவுவதற்கு ஏற்ற மணிமண்டப வேலைகளைத் துரிதகதியில் எடுத்து நாவலரின் சொத்தில் நாவலர் சிலையை வைப்பதற்கான மணி மண்டப வேலை வெகுவிரைவில் பூர்த்தியடைந்தது.

## நாவலர் சிலை பவனி

கொழும்பில் இருந்து நாவலர் சிலையை ஊர்வலமாக எடுத்து வருவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அப்பொழுது பணியாற்றிய தேசாதிபதி, பிரதமர், கொழும்பு வாழ் மக்கள் நாவலர் சிலையை நன்கு வரவேற்று வழிபாடு செய்தனர். பயபக்தி நிறைந்த ஊர்வலம் இதுவாகும். யாழ்ப்பாணத்திலும் மிகவும் பக்திபூர்வமாக நாவலர் சிலை பவனி இடம்பெற்றது. 29.06.1969 பூரணை தினத்தன்று நாவலரின் சிலை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் கோலாகலமாக நிறுவப்பட்டது.

தென்னகத்திலிருந்து மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், செஞ்சொற் கொண்டல் சிங்கார வேலனார், கிளாரினெட் வித்துவான், ஏ.கே.சி.நடராஜன், இசையரசி சேலம் ஜெயலட்சுமி முதலான பிரமுகர்கள் விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை நல்லைக் குருமணி சுவாமிநாதத்தம்பிரான் குருக்கள், வேதசிவாகம ஞானபானு, அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக்குருக்கள், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, வியாகரண சிரோமணி தி.கி.சீதாராமசாஸ்திரிகள், கொக்குவில் த.குமாரசாமிப்புலவர், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன் என்பவர்களுடன் ஏனைய சமயப் பெரியார்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

அரசியல் தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், டாக்டர் இ.எம்.வி.நாகநாதன், வி.என்.நவரத்தினம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், எஸ்.எம்.இராசமாணிக்கம், க.துரைரத்தினம் என்போரும் சமூகமளித்துச் சபையை அலங்கரித்தனர்.

விழாவுக்கு நீதியரசர் வீ.சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மின்சக்தி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் ம.ஸ்ரீகாந்தா அனைவரையும் வரவேற்க, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் தொடக்கவுரையை நிகழ்த்தி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

நாவலர் சபையின் தலைவராக இருந்த வீ.சிவசுப்பிரமணியமும் நாவலர் சபையின் செயலாளராக இருந்த ம.ஸ்ரீகாந்தாவும் இவர்களது சகாக்களும் குறித்த நாவலர் விழா சிறப்படைய உழைத்த உழைப்போ மிக மிகப் பெரியது. வரலாற்றுப் பெருமைமிக்க இவ்விழாவைக் கண்டு குதூகலித்தவர்கள் பல்லாயிரம் பேர்.

பதினாறு ஆண்டுகள் கழித்துப் புனிதமான நாவலரின் சிலை 17.08.1985 அன்று மாலை வேளையில் பெயர்த்தெடுக்கப்பட்டு அலங்கோலமான முறையில் சில விஷமிகளால் கொண்டு செல்லப்பட்டமை துரதிஷ்டவசமானதே. நாவலர் பெருமானுக்கு அவர் பிறந்த ஊரிலேயே ஏற்பட்ட இந்த அவமதிப்பைக் கண்டவர்கள், கேட்டு அறிந்தவர்கள் கண்ணீர் விட்டார்கள். நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நாவலர் சபையினர் கையாண்டு வந்த ஒழுங்குகளும் கைவிடப்பட்டன. ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாக நல்லூர் மணிமண்டபம் (சிலை நிலை பெயர்ந்த மணி மண்டபம்)அநாதரவாகவே காட்சியளிக்கின்றது.

## கனடாவில் நாவலர்

எமது நாட்டில் இருந்து இடம்பெயர்ந்து சென்று கனடாவில் குடியேறிய தமிழர்கள் ஒன்று கூடி நாவலர் பெருமானுக்குக் கடந்த ஆண்டில் சிலை எழுப்பியதுடன், மலர் ஒன்றும் வெளியீடு செய்துள்ளார்கள். இது ஒரு நன்றி மறவாத செயலாகும்.

நாவலர் சபை ஒரு கூட்டத்தைக் கூட்டியது. பிரமுகர்கள் பலர் சமூகங்கொடுத்தனர். நாவலர் சிலை எடுக்கும் விவகாரம் அங்கே எடுத்துக் கொள்ளப்பட்டது. சிலையை நகர்த்தக் கூடாது என்ற கருத்தே சபையில் மேலோங்கி நின்றன.

பண்டித வித்துவான் இ.திருநாவுக்கரசு, சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலானவர்கள் சிலையை நகர்த்தக் கூடாது என்ற கருத்தினை மிகவும் அழுத்தமாக எடுத்துக் கூறினார்கள். கருத்து வேறுபாடு காரணமாக நாவலர் சபையில் தாம் வகித்து வந்த உப தலைவர் பதவியினைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இராஜினாமாச் செய்தார். எனினும், அடியார்களின் வழிபாட்டுக்குரிய நாவலர் பெருமானின் சிலை 17..08.1985 இல் இரவு நேரத்தில் பெயர்க்கப்பட்டு நாவலர் கலாசார மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கங்கள் சபைகள் எதிர்த்தன. பெரியார்கள் பலரும் கவலை தெரிவித்தனர்.

## நாவலர் பணிமன்றம்

நாவலர் சிலை கடத்தலைக் கண்டிக்கும் நோக்கமாகத் தோற்றுவிக்கப்பட்டது நாவலரின் பணிமன்றம். மன்றத்தின் கையேடு நாவலர் குரல் என்கின்ற பத்திரிகை, இதன் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உழைத்தவர் ஏழாலையூர் கலாநிதி பண்டிதர் மு.கந்தையா.

## புதிய சிந்தனை

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் சிலை நிறுவிய பின்னர் நாவலர் பெருமான் வாழ்ந்த இடம் (நாவலர் வீதியில்) 1971 இல் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் அங்கு நிர்மாணிக்கப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலையைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் நாவலர் சபை சிந்தித்தாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

நாவலர் வாழ்ந்த இல்லம் தூய்மையானதுதான். அங்கு அமைக்கப்பட்ட நாவலர் கலாசாரமண்டபத்தில் நாவலர் சிலை வைக்கப்படுவதும் பொருத்தம்தான். அங்கு ஒரு சிலையை இந்து கலாசார அமைச்சு பிரதிஷ்டை செய்திருக்கலாம். அல்லது நாவலர் சபை அம்மண்டபத்தில் நாவலர் சிலை ஒன்றை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதைவிடுத்து உலகில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் குதூகலிக்கத் தக்க வகையில் நல்லூர்க் கந்தசாமி கோயில் தெற்கு வீதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட வழிபாட்டுக்கு உரிய நாவலர் சிலையைப் பிடுங்கிக்கொண்டு போய் நாவலர் கலாசார மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டுமா? சிந்தியுங்கள். ✱

# படையினரும் ஆயுதக்குழுக்களும் இணைந்தே குடாநாட்டில் பொதுமக்கள் மீது அடாவடி

## நீர்வேலி சம்பவத்துக்கு ஈழவேந்தன் எம்.பி.கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ.5

ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களும் இணைந்தே குடாநாட்டில் அப்பாவிப் பொது மக்களைக் கொலைசெய்து வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன். நீர்வேலியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாம் ஏங்கும் அளவிற்கு தமிழீழ மண்ணில் சிங்கள இராணுவத்தினதும் அவர்களுக்குப் பக்கத்துணையான ஆயுதக்குழுக்களினதும் துப்பாக்கிச்சூடும் வெறியாட்டமும் தொடர்கிறது. உடன் நிறுத்தப்படாவிடின் எம் மண்ணிலேயே நாம் வேரோடு சாய்க்கப்படுவது உறுதி.

எங்கள் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எல்லை மீறிப் பொறுமைகாத்த நிலையில் எவரையும் புண்படுத்தாது அனைவரையும் பண்படுத்தி ஆட்கொள்ளுகின்ற முறையில் கடந்த 27.11.2005 இல் நிகழ்த்திய மாவீரர் உரையில், சிங்களத்தலைமைப் பீடத்திடம் மனமாற்றம் காணவிலல்லை எனின் அடுத்த ஆண்டே நாம் களத்தில் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றோம் என்று எச்சரித்த நிலையிலும், யாழ் மண்ணிலும், மட்டக்களப்பு மண்ணிலும், திருமலை மண்ணிலும் வெவ்வேறு வடிவங்களில் சிங்களப் படையின் வெறியாட்டம் தொடர்கிறது.

பக்கதுணையாக எம் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள ஆயுதக்குழுக்களின் அட்டகாசமும் தொடர்கிறது. சிங்களப்படைக்கு ஆயுதக்குழுக்கள் துணை நிற்கின்றனவா அல்லது ஆயுதப் படைக்கு சிங்களக்குழுக்கள் துணை நிற்கின்றனவா என்ற ஆய்வு இங்கு தேவையில்லை. இவ்விரு பகுதியினரும் கைகோர்த்துக் கொண்டுதான் இவ்வெறியாட்டம் ஆடுகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் புத்தூரில் ஒரு இளம்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்க இராணுவம் முனைந்தபோது மக்கள் கொதித்தெழுந்ததன் விளைவாக தோல்வி கண்ட சிங்கள இராணுவம் அங்கிருந்த பொதுமக்களைத் தாக்கியதன் காரணமாக அம்மண்ணில் இருந்தே அவ்வூர் மக்கள் வெளியேறும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஓர் இளைஞன் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானான். மற்றும் பலர் படுகாயமுற்ற நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். நடந்த வெறியாட்டத்தைக் கண்டித்து நாம் போர்க்கோலம் பூண்டு அறிக்கைகள் விடுத்ததோடு நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினையின் விளைவை புட்டுக்காட்டி உரைநிகழ்த்தினோம்.

யாழ்.படைத்தளபதி சுனில்தென்னக்கோனோடும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுத்தோம். குடியரசுத்தலைவர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டதோடு, கொழும்பில் உள்ள இராணுவத்தலைமைப் பீடத்திற்கு இத்தகைய வெறியாட்டம் தொடரின் நாமோ அரசோ விரும்பாத விளைவுகள் ஏற்படும் என்றும் எச்சரித்தோம்.

எம் வேண்டுகோள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் நீங்கள் யார் எங்களுக்கு அறிவுரை கூறுவது என்று சொல்வது போல் - சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற வெறியாட்டத்தின் தொடர்ச்சியாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல்- நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகில் நடைபெற்ற துப்பாகிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

தமிழீழ மண்ணில் வலோத்காரமாகக் குடிகொண்டு எம்மைத் தாக்குகின்ற படையாகிய சிங்களப்படை இங்கு இருக்கும் வரை -அவர்களுக்குப் பக்கத்துணையாக ஆயுதக் குழுக்கள் இயங்கும் வரை - எமக்கு விடிவுமில்லை. விமோசனமும் இல்லை.

எம்மை எதிர்நோக்குகின்ற அனைத்து சிக்கல்களுக்கும் ஒரே மருந்து சிங்களப் படை எம் மண்ணில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும்.

# ஆறுமுகனாரின் பாதுகாப்பு திடீரென்று வாபஸ்

கொழும்பு, டிசெ. 5

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் கட்சியின் ஏனைய முக்கிய பிரமுகர்களுக்கும் வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு திடீரென வாபஸ் பெற்றிருக்கின்றது.

ஆறுமுகன் தொண்டமானுக்கு இதுவரை 19 பொலீஸாருக்கு மேலதிகமாக, கமாண்டோக்கள் மற்றும் இராணுவம் மற்றும் விமானப் படையினரின் பாதுகாப்பும், மூன்று பிக் - அப்' களுக்கும் கூடுதலான வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், அவை அனைத்தும் திடீரென வாபஸ் பெறப்பட்டுள்ளன. ஆக வெறும் ஐந்து பொலீஸாரின் பாதுகாப்பு மட்டுமே ஆறுமுகனாருக்கு இப்போது மிச்சமாக வழங்கப்பட்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதை அடுத்து தேர்தலில் அவருக்கு எதிராக நின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

அதன் ஓர் அங்கமே ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புத் திடீரென குறைக்கப்பட்ட நடவடிக்கை எனவும் -

இ.தொ.கா. தலைவர் ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து அரசுக்குத் தாங்கள் ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றும் -

ஆனால், நாட்டில் பதிவு செய்யப்பட்ட 52 அரசியல் கட்சிகள் உள்ள நிலையில் அவற்றில் ஒன்றின் தலைவர் என்ற முறையில் உள்ள தொண்டமானுக்கு இப்படி ஐந்து பொலீஸாரை வழங்குவதே அதிகப்படியானது என்றும் -

அரசுத் தரப்பில் விளக்கம் கொடுக்கப்பட்டதாம். தமது தலைவர்களின் பாதுகாப்பையே கேள்விக்குள்ளாக்கியிருக்கும் அரசின் நடவடிக்கை குறித்து ஏனைய தோழமைக் கட்சிகளுடன் ஆராய்ந்து காத்திரமான நடவடிக்கை எடுக்க இ.தொ.காங்கிரஸ் தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

# சந்திரிகாவுக்கு வீட்டை அளிக்க மறுக்கிறார் கதிர்காமரின் மனைவி!

## அதனால் வேறு மனை பார்க்கிறார் முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.5

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாவனைக்கு ஒப்படைப்பதற்கு லக்ஷ்மன் கதிர்காமரின் பாரியார் மறுத்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தம்மிடமிருந்த முக்கியமான பெறுமதிமிக்க பொருள்களை ஹொரகொல்ல வளவுக்கு அனுப்பியுள்ளார். அத்துடன் தமது பாவனைக்காகக் கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியிலுள்ள இல்லமொன்றை சந்திரிகா தேர்ந்தெடுத்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புப் பிரச்சினையின் காரணமாகவே திருமதி சுகந்தி கதிர்காமர் முன்னாள் ஜனாதிபதிக்கு வீட்டை வழங்கும் கோரிக்கையை நிராகரித்தார் எனத் தெரியவருகிறது.

அதேசமயம், முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தமக்கு வழங்குமாறு அவரது பாரியார் விடுத்த வேண்டுகோளை முன்னாள் ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாதிருந்தமையும் இந்த விட்யத்தில் தாக்கம் செலுத்தியிருந்ததாகக் கூறப்படுகிறது. (க-3)


கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
வெற்றிடங்கள்
கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

தகைமைகள்: க.பொ.த. (சா/த) சித்தி
உயரம்: 5'4" மார்பு: 32"
நல்ல கண்பார்வையும் தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூபா 6300/=(மாதமொன்றும்)
ஒழுங்குவருகை
ரூபா 800/= (மாதமொன்றும்)
மற்றும் E.P.F, E.T.F வழங்கப்படும்.

கிராம அதிகாரியின் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தே.அ.அ., கல்விச் சான்றிதழ் என்பவற்றுடன் 10.12.2005ஆம் திகதி காலை 10 மணிக்குக் கீழ்க்காணும் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவும்.

இல.807, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். C/46492)(51-11-13) பணிப்பாளர்.



சதுரங்க வகுப்புகள்

- ★ சதுரங்கம் மதிநுட்பம், மன ஒருமைப்பாடு, ஞாபகசக்தி, ஆராய்ந்து கொள்ளும் திறன், ஆளுமை என்பவற்றை வளர்க்கின்றது.
- ★ சிறுவர்களுக்கான விடுமுறைக்கால புதிய வகுப்புகள் ஆரம்பம் 10.12.2005
- ★ 09.12.2005 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு சதுரங்கப் புத்தகங்கள், சீடிக்கள் இலவசமாக வழங்கப்படும்.
- ★ பின்வரும் சதுரங்க புத்தகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
  1) சதுரங்கத்தின் அடிப்படைகளும் தொடக்கமுறைகளும்
  2) சதுரங்கத்தில் இறுதியாட்டம்

தொடர்புகளுக்கு:
கரிகஸ்பரோவ் சதுரங்க அக்கடமி,
(43528)(51-11-13) 5, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


## காரைநகரில் சமுர்த்திச் செயற்பாடு

காரைநகர்,டிசெ.5

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் காரைநகர் மத்தியில் உள்ள பொதுக்கிணறு ஒன்று புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகக் காரை. மத்தி சமுர்த்தி அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் காரைநகர் கிழக்குக் கிராமசேவையாளர் பிரிவில் இடைப்பிட்டி, மில் வீதியும் காரைநகர் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் பொதுக்கிணறு ஒன்றும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - மக்கள் எழுச்சித்திட்டத்தின் கீழ் காரைநகர் சமுர்த்தி வங்கி ஊடாக சமுர்த்தி பயன்நுகரிகளுக்குச் சுயதொழில் முயற்சிக்காக பத்தாயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரையிலான கடனும் வழங்கப்பட்டு வருகின்றது. (3-73)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் சங்கத்தினால் ''கெமிஸ்பியர்'' நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தப்படுகின்றது.

பிரதம விருந்தினராக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேலும் கௌரவ விருந்தினராக வ்வுனியா வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி ஆர்.மகேஷ்வரனும் கலந்துகொள்வர்.

இரசாயனவியல் சங்கத்தின் தலைவர் பி.பாகுலேயின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். சர்வதேச உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத் தலைவர் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை இரசாயனவியல் சங்க சிரேஷ்ட பொருளாளர் விரிவுரையாளர் கலாநிதி ஜெ. பிறின்ஸ் ஜெயதேவன் வழங்க பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் பெற்றுக் கொள்வார். (3-185)

## யாழ்.வலயத்தில் விளையாட்டு விழா

கோப்பாய்,டிசெ.5

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் விளையாட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் கலந்துகொள்வார். பரிசில்களை துணைவியார் பரமேஸ்வரி கணேஷ் வழங்குவார். (3-72)

---

உ
சிவமயம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவநரும்
சைவப் பெருவள்ளலாருமாகிய

## சேர் பொன்.இராமநாதன் அவர்களின்

குருபூசைத்தின விழா

நாள் : நாளை (6.12.2005) செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 7 மணிமுதல்
இடம் : ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபா மண்டபம்.

நிகழ்ச்சிநிரல்

1. காலை 7-8.30 மணிவரை அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு 108 சங்காபிசேகமும் விசேட பூசையும்.
2. 8.30 மணிக்கு சேர் பொன். இராமநாதன் திருவுருவச் சிலைக்கும், பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள அவரின் உருவப்படத்திற்கும் துணைவேந்தர் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வு.
3. 9 மணிக்கு சேர் பொன். இராமநாதன் வேதாகம நிறுவன மாணவர்களின் வேதபாராயணம், திருமுறை ஓதல், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மன்றம்,
திருநெல்வேலி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(43513)(51-11-45-24)

---

## கழுகுகள் விழி நீருகுத்து...



அமரர்
இராமசாமி உருத்திரா
B.Sc. (Lond), Advocate,
Commissioner of oath

என்றும் குன்றா ஒளி விளக்காய்
மன்னும் மக்களும் மகிழ
வென்று பணி செய்த பெருமகனே...
உகந்த நல் உபதேசம்
உரிய வேளை செய்த தலை மகனே... உன்
இடம் நிரப்ப யாருளர்?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கழுகுகள் வி.கழகம்,
நெற்கொழு, வல்வெட்டித்துறை.
(43549)(51-11-13)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 04 ★ 04 ★ 1954 | 16 ★ 11 ★ 2004 |

அமரர் இராசையா இந்திரகுமாரன்

ஊருக்கு உபகாரியம் உறவுக்கு ஏணியாய்
தாய்க்கு இனிய மகனாய்
அன்புக்குரிய இனிய உடன் பிறப்பாய்
பாசமிகுந்த மைத்துனராய் - அவனியில்
அவதரித்த எமது ஆசை மாமாவே!
ஆண்டுகள் ஒன்றானாலும் அழியாது உன் சோகம்.

காலையடி,பண்டத்தரிப்பு. - தேவகுலசிங்கம் குடும்பம்.
(43511)(51-11-13)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 ★ 04 ★ 1931 | 05 ★ 11 ★ 2005 |

அமரர் வேலுப்பிள்ளை வீரசிங்கம்

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை நீர் பிரிந்து இன்று
திங்கள் ஒன்று ஆனாலும்
துயரமே எமது நிலை ஆனதப்பா.

28/2, சாஸ்திரியார் ஒழுங்கை,
கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.
(43579) (51-11-45-24)

---

தென்மராட்சியின் மாமனிதன், மட்டுவில் ஈந்த தவப்புதல்வன்
வளர்மதியின் தந்தை

## அமரர் பொன் நாகமணி அவர்களின்

## 9ஆவது ஆண்டு நினைவு தினம் - 2005



| வளர்மதிக்காய் | வான்மதிக்காய் |
|---|---|
| 25 ★ 10 ★ 1936 | 05 ★ 12 ★ 1996 |

# பொன். நாகமணி

(மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகரும்
சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவரும் சங்கீத விற்பன்னரும்)

பொதுப்பணியே உன் இலட்சியமாய்க்கொண்டு
மக்களின் விடிவை நோக்கிய பாதையிலே ஜீவ ஒளி
ஏந்திச் சென்ற முதல் மனிதனே!
மாறுபட்ட கருத்துக்களால் வேறுபட்டுவிடாது
எம்மை ஒருதாய் மக்களாய் வளர்த்தெடுத்த
எம் அருமைத் தந்தையே!
எம்மவர்க்கு எங்ஙனும் பகையென்று கண்ணுற்றால்
உன்னுயிர் தன்னை முன்னதில் வைத்து நீதி கேட்ட
வெள்ளைப் புறாவே!
அபாயக் குரல் கேட்டால் அர்த்தஜாம வேளையிலும்
துடித்தெழுந்து அங்குவந்து உயிர்காத்த தெய்வமே!
கல்வி கற்க வைத்தவனே! அள்ளி வழங்கிய வள்ளலே!

கருணையின் வடிவே அநாதரவாய் எம்மைவிட்டு
ஏன் சென்றாய்? ஊரைக் கேட்டாயா?
உறவைக் கேட்டாயா?
எம் பின்னவர் உன்னை எங்கேனக்
கேட்டால் அங்கென நாம் வான் மதியைக்
காட்டேம் நீ படைத்த வளர்மதியைக் காட்டுவோம்
"பூவுலகில் உன் சேவை போதும் புண்ணியனே
என்று வஞ்சகமாய் வானுலகோர் வலிந்து
இழுத்தனரோ? இன்னும் உன் சேவை
இங்கேதான் தேவை இறங்கி வாராயோ?
இதயமலர் தூவி இறைஞ்சி நிற்கின்றோம்
இந்த 9ஆவது ஆண்டு நினைவு நாளிலே.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (43569) (24-11-45)

வளர்மதி சனசமூக நிலையமும்,
அதன் உப அமைப்புகளும்.

# இளைஞர், யுவதிகளிடம் சேவை மனப்பாங்கை வளர்க்க உதவும் லியோ கழகங்கள்

வேகமாக இயங்கிவரும் இன்றைய உலகில் அனைவருமே ஓய்வின்றி இருக்க வேண்டிய கட்டாயநிலை தோன்றிவருகின்றது. இந்த வேளையில், அனைவருக்கும் தன்னைச் சூழவுள்ள நலிவுற்ற சமூகத்திற்காகச் சேவை செய்யும் மனப்பான்மை அருகிவருகின்றது.

குறிப்பாக இளைஞர், யுவதிகள் மத்தியில் சேவை மனப்பான்மை என்பது கால ஓட்டத்திற்கேற்ப குறைந்து செல்கின்றது. இன்றைய இளைஞர், யுவதிகளே நாட்டின் நாளைய தலைவர்கள்.

ஆகவே இளைஞர், யுவதிகள் மத்தியில் சேவை மனப்பான்மை என்பது வளர்க்கப்படவேண்டிய ஒன்றாகவுள்ளது. இவர்கள் மத்தியில் சேவை மனப்பான்மை, தலைமைத்துவ ஆற்றல், பொறுப்புகளை ஏற்று சரிவர செய்து முடிக்கின்ற மனநிலை போன்றவற்றை உருவாக்க வேண்டும்.

இவர்களை குழுக்களாக இணைத்து அவர்கள் மத்தியில் ஆற்றல்களை வளர்ப்பதற்காக பல சேவைக்கழகங்கள் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் சர்வதேச ரீதியாக இயங்கி வருகின்ற சேவைக்கழகங்களில் ஒன்று லியோ கழகம் (Leo Club). லியோ கழக அங்கத்தவர்களுக்காக சர்வதேச அரிமாக் கழகத்தினால் (International Lions Club) இன்றைய தினம் சர்வதேச நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'லியோ' என்றால் என்ன? L என்றால் Leadership, E என்றால் Experence, O என்றால் Oppertuenitly, எனப் பொருள்படுகின்றது. அனுபவ ரீதியாக தலைமைத்துவத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்குதலே லியோ கழகத்தின் நோக்கமாகும்.

அரிமாக் கழகத்தை (Lions Club) தாய்க் கழகமாகக் கொண்டு சர்வதேச அங்கீகாரத்துடன் இயங்கி வருகின்ற ஒருசேவைக் கழகமே இந்த லியோ கழகம். அதாவது, ஒரு லியோ கழகமானது ஓர் அரிமாக் கழகத்தின் அனுசரணையின் கீழேயே ஆரம்பிக்கப்படுகின்றது.

அரிமாக்கழகங்களின் இளையவர்களாக லியோக்கள் இயங்கி வருகின்றார்கள். இன்று உலகில் 137 நாடுகளில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 37 ஆயிரம் லியோ அங்கத்தவர்கள் லியோ கழகத்தில் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

**லியோ கழகத்தின் தோற்றம்**

உலகின் முதலாவது லியோ கழகம் அபிங்டன் லியோ கழகம் (Abington Leo Club). 1952ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்சிலவீனியாவை (Pennsylvania) சேர்ந்த கிளென்சைட் அரிமாக் கழகத்தை

## இன்று சர்வதேச லியோ தினம்

(Glenside Lions Club) சேர்ந்த அரிமாக்களான ஜிம் கிராவர் மற்றும் வில்லியம் எனஸ்ட் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கழகமானது அபிஸ்டன் உயர்பாடசாலை (Abingston High School) சேர்ந்த பேஸ்போல் அணியின் (Base ball team) வீரர்கள் உட்பட 26 அங்கத்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் பல லியோ கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1967 ஆம் ஆண்டு October மாதமளவில் லியோ கழகம் செயற்படத் தொடங்கியது. உத்தியோகபூர்வமாக சர்வதேச அரிமாக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் முதலாவது லியோ கழகம், வத்தளை லியோ கழகம். இது 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையானது 6 லியோ மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது லியோ மாவட்டம் $306A_1$, $306A_2$, $306B_1$, $306B_2$, $306C_1$, $306C_2$. என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு லியோ மாவட்டங்களிலும் அரிமாக் கழகங்களைப் போல் மாவட்ட தலைவர் மற்றும் மாவட்ட கவுன்சில் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டு கழகங்களின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன.

**பல்வேறு இடங்களிலும் லியோ கழகங்கள்**

இலங்கையிலுள்ள பல முதன்மைப் பாடசாலைகளிலும் பல மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பாடசாலைக் கழகங்களாகவும் இயங்கி வருகின்றது. சமூக கழகங்களாகவும் பல்கலைக்கழக கழகங்களாகவும் பல கழகங்கள் இயங்கி வருகின்றன.

பொதுவாக 28 வயதுக்குட்பட்ட அங்கத்தவர்கள் லியோ கழக அங்கத்தவர்களாக இருக்க முடியும். அந்த வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களை ஒரு அரிமா (Lion) அங்கத்தவராக இணைத்துக் கொள்ளமுடியும்.

12 வயது தொடக்கம் 17 வயதுக்குட்பட்ட லியோ அங்கத்தவர்களை Alpha அங்கத்தவர் எனவும் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் உட்பட்டவர்களை Omege அங்கத்தவர்கள் என்றும் அழைப்பர்.

12 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் தம்மை லியோ அங்கத்தவராக இணைத்துக் கொள்ளும் போது குறித்த லியோ கழகத்தின் தாய்க் கழகமான அரிமாக்கழகம், சர்வதேச அரிமாக் கழகத்திடமிருந்து USA சர்வதேச அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் லியோ சின்னம் போன்றவை பெற்றுக் கொடுக்கும்.

ஒருவர் லியோ அங்கத்தவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் தன்னை ஒரு சேவையாளராகவும் தலைமைத்துவ ஆற்றல் மற்றும் குழுச் செயற்பாடு தொடர்பான ஆற்றல் உள்ளவராகவும் மாற்றிக் கொள்ள முடியும். அதேவேளை - சர்வதேச அங்கத்துவ சான்றிதழை கொண்ட ஓர் அங்கத்தவர் சமூகத்தின் பல்வேறு பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சர்வதேச லியோ நாளில் உலகம் முழுவதிலும் உள்ள லியோ கழகங்களின் அங்கத்தவர்கள் பலதரப்பட்ட சேவைகளை மேற்கொள்ளவுள்ளனர். இலங்கையிலும் லியோ மாவட்டங்களில் டிசெம்பர் முதல் வாரமானது லியோ வாரமாக கருத்தில் கொள்ளப்பட்டு, இத்தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பலதரப்பட்ட சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2005 - 2006

சுகாதாரம், மருத்துவ முகாம்கள், பொது இடங்களில் சிரமதானப் பணிகள், இரத்த தானம், பாடசாலைச் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், சிறுவர் இல்லம், வயோதிபர் இல்லங்களில் பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நலிவுற்ற சமூகத்திற்கான பலதரப்பட்ட சேவை செயற்பாடுகளை மேற்கொள்ளல். இத்தகைய அரிய பல சேவைகளை அரிமா கழகத்தின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றது.

தற்காலத்தில் இளைய சமூகத்தினர் கல்வியில் மட்டுமல்லாது பல்வேறுபட்ட இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். எனவே, இது போன்ற சேவைக்கழகங்கள் தம்மை இணைத்துச் சேவை மனப்பான்மையுள்ள - தலைமைத்துவ அறிவு மிக்க பிரஜையாக மாற்றிக்கொள்ள லியோ கழகம் போன்ற பல கழகங்கள் ஊக்குவிக்கப்படவேண்டியது அவசியமாகும். ✱

# கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரின் புதிய கடமை விவரச் சுற்றறிக்கை

அரியாலை, டிசெ.5

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுத் திணைக்களங்களில் பணியாற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கு அவர்கள் மேற்கொள்ள இருக்கும் கடமைகள் சம்மந்தமான புதிய சுற்றறிக்கை ஒன்றை மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தப் புதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறே கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-17)

*12 லட்சம் ரூபா செலவில்*

# வெல்லம் உற்பத்தித் தொழிற்சாலை அச்சுவேலியில் புனரமைக்கப்பட்டது

அச்சுவேலி, டிசெ.5

அச்சுவேலி பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை 12 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கு, ஊரியான் பகுதியில் செயற்பட்டுவந்த சங்கத்தின் வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை 1995 ஆம் ஆண்டு குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகச் சேதமடைந்தது.

யாழ். செயலகம் வழங்கிய 5 லட்சம் நிதி மூலமும் சங்கத்தின் 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலமும் இந்தத் தொழிற்சாலை தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப் பகுதியில் பனை வெல்லம், பனஞ்சீனி ஆகியவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுவந்த இந்தத் தொழிற்சாலை இதுவரை செயற்படாமல் இருந்துவந்தது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து தனது வழமையான உற்பத்திகளை ஆரம்பிக்கவுள்ளது.

(ஐ-11)



'நியாப்' திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொல்லங்கிராய் குளம் புனரமைக்கப்பட்டு தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுந்தரேசனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் நியாப் நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநலசேவைத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் ஆகியோர் நிற்கின்றனர். (படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)


# வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்திற்கென பயனுகரிகள் தெரிவுசெய்யப்பட்டுப் பிரதேச செயலர்களால் 15 நாள்களுக்குப் பொதுமக்களின் பார்வைக்குப் பொதுஇடங்களில் வைக்கப்படும்போது பொதுமக்கள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம். ஆட்சேபிக்கப்படுவோர் மீளாய்வுக்குட்படுத்தப்படுவர். அதன் பின்பு குறைகேள் நிவர்த்திக்கப்பட்டு பயனுகரிகள் முன்னுரிமைப் பட்டியல் பிரதேச செயலரால் அரச அதிபரது அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட பயனுகரிகளுக்கு,

✱ முற்றான வீடழிவுக்கு 250,000/- வும்

✱ பகுதியான வீடழிவுக்கு 100,000/- ரூபாவும்

கட்டம் கட்டமாகப் பயனுகரிகளின் வங்கிக்கணக்கிற்கு மாவட்ட வீடமைப்பு மீள் நிர்மாண முகாமைத்துவப் பிரிவினால் அனுப்பிவைக்கப்படும்.

யுத்தத்தால் வீடழிந்து இத்திட்டத்தில் சேர்க்கப்படக்கூடிய நிபந்தனைகளைக் கொண்டிருந்தும் நீங்கள் பயனுகரியாகத் தெரிவுசெய்யப்படவில்லையா?

என்ன செய்யலாம்? முடிவான விவரங்கள் நாளைய பத்திரிகையில்.

(#/46378) (24-19-46-42)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Sanyo வகை Model No - PLC-9005EA புறொயெக்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6569867. (43477)

## காணியும் பெரிய கட்டடமும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் 15 பரப்புக் காணியில் அமைந்த 9500 சதுர அடிக் கட்டடம் உடன் விற்பனைக்கு. சுற்றுமதில் 9 அடி உயரம், வாகனத்தரிப்பிட வசதியும் சகல வசதிகளும் உடையது. மேல்மாடி வீடாகவும் தொழிற்சாலையாகவும் திருமண மண்டபம் களஞ்சியம் ஆகவும் பயன்படுத்தலாம். தொடர்பு: **T.P.:** 077 6589400 (43391)

## காணி விற்பனை

நல்லூரில் மூன்று பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடனும் மூன்று பக்கங்கள் மதிலுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 86, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.: 222 8231 (43585)

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் பிறவுண் வீதி, நாவலர் வீதிப் பகுதிகளில் அளவான சிறிய வீடு வாடகைக்கு தேவை. முற்பணமும் வழங்கப்படும். T.P.: 0776365950 (43588)

## மாடிக்கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி (மனோகராச் சந்திக்கு அருகில்) 14 அறைகள், 3 மண்டபங்கள், நவீன குளியலறைகள், தனியான கிணறுகள், வாகனத் தரிப்பிடமும் கொண்ட மாடிக்கட்டடத் தொகுதி வாடகைக்குண்டு. நேரடித் தொடர்பிற்கு முன்னுரிமை. தொடர்பு: உரிமையாளர் க.பாலமோகன், 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 2227085, 0777 162428 (43560)

## தவறிவிட்டது

பூவத்தோட்டம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி என்ற முகவரியை உடைய அப்புக்குட்டி அருந்தவச்செல்வி என்பவருடைய தேசிய அ.அட்டை (705723729V), Jop I.C, , விசேட அடையாள அட்டை மற்றும் பல ஆவணங்கள் அடங்கிய பாக் ஒன்று 30.11.2005 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (43582)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.*

(43247)(42.32.19.11)

**கல்வியாண்டு-2006**

தரம் 1 முதல் O/L வரை

ஆரம்பம்: 09.12.2005 வெள்ளி 4.30

**கற்சுமி கல்வி நிறுவனம் 166, நாவலர் வீதி, யாழ்.**

## மண்டைதீவில் ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.5

மணடைதீவு றோ.க.த.க. வித்தியாலயம் நடத்தும் ஒளி விழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக மண்டைதீவு பங்குத் தந்தை அருட்திரு. அ.அமல்ராஜ், வேலணைக் கோட்டக் கல்வி அலுவலர் சோ.தில்லைநாதன், தீவக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவபாதம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-190)


## பரிசளிப்பு விழா

கோப்பாய்,டிசெ.5

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழா நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சிறுவர்பாதுகாப்பு நிதிய அபிவிருத்தி முகாமையாளர் ஏ.பேரின்பநாதனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய்கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கௌரவ விருந்தினர்களாக அச்செழு விவசாய சம்மேளனத் தலைவர் இ.இலட்சுமணர் அச்செழு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிறிமோகன் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-72)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு.எஸ். தவராசா**

(தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- பருத்தித்துறைப் பிரிவு)

இலங்கையிலேயே சிறந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் விருதினை 22.10.2005 இல் நடைபெற்ற தலைமையக பொதுச்சபைக் கூட்டத்தில் பெற்றமையையிட்டு வாழ்த்துகிறோம்.

*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை.*

(C/46610)

## விசேட அறிவித்தல்

மட்டுவில் வடக்கு
பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன்
தேவஸ்தானம்

**மஹோற்சவ விஞ்ஞாபனம் -2005**

அம்பிகையின் திருவுளச் சீட்டு சம்மதப்படி 08-12-2005 கார்த்திகை 23 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து உற்சவங்கள் நடைபெறும்.

- 16-12-2005 மார்கழி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறும்.
- 17-12-2005 மார்கழி 2 சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

**சி.சிவகுரு,** தர்மகர்த்தா.

(43561)(26-32-11-14)

## மாதர் சங்கங்களுக்கான பால், பால்நிலை அடிப்படையிலான பெண்கள் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை

மேற்படிப் பயிற்சிப் பட்டறையை ''தேவை நாடும் மகளிர் அமைப்பும்'' U.N.H.C.R. நிறுவனமும் இணைந்து நடத்தி வருகின்றன. பயிற்சிப் பட்டறையின் விவரம் வருமாறு:-

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| * உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பழை | 06.12.2005 | மு.ப.9.00 - பி.ப.4.00 |
| * வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மருதங்கேணி, காரைநகர் | 07.12.2005 | மு.ப.9.00 - பி.ப.4.00 |

**இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி புறநிலை படிப்புகள் அலகு (யாழ்.போதனா வைத்தியசாலை முன்).**

ஒவ்வொரு மாதர் சங்கத்திலிருந்தும் 2 பிரதிநிதிகள் பங்குபற்றலாம்.
(தங்களுக்குரிய பிரயாணக் கொடுப்பனவு, உணவு வழங்கப்படும்.)
(இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றும் மாதர் சங்கங்களின் எதிர்கால செயற்றிட்டங்கள் குறித்துத் திட்டமிடப்படும்.)

**இணை இணைப்பாளர்,**
தேவை நாடும் மகளிர் அமைப்பு,
22/1, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி.

(43577)(32-11-14)

## 41ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 07 - 1882



இறப்பு 05 - 12 - 1964

**அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம்**

(முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கூட்டுறவுத் தந்தை)

கூட்டுறவை நாட்டுக்குத் தந்தவரை
கூட்டுறவால் நாட்டுயர்வை காட்டிய
கூட்டுறவுத் தந்தையை இன்று
வீட்டுறவால் நினைக்கின்றோம்.

'கிறவுன் வில்லா',
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

**பேரப்பிள்ளைகள் குடும்பம், பூட்டப்பிள்ளைகள்.**

(43586)(32-11-14)

## ஐ.நா வின் உதவி

காரைநகர் மத்தி அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தால் ஐஸ்கட்டி உற்பத்தி செய்யும் சாதனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான இந்தச் சாதனம் காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என அதன் தலைவர் க.இராஜச்சந்திரன் தெரிவித்துள்ளார். (3-73)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்மா இரத்தினசிங்கம்



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இரத்தினசிங்கம் 01.12.2005 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இரத்தினரஞ்சினி அழகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இராசேந்திரம் (ஆஸ்திரேலியா), இராசசுந்தரம் (ஆஸ்திரேலியா), யோகேந்திரன் (கனடா), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் த.அழகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி மனோராணி (ஆஸ்திரேலியா), திருமதி பிரேமிளா (ஆஸ்திரேலியா), திருமதி ஸ்ரீறஜனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பிரியதர்சினி, சுதர்சன் ரதி, மகிபன், அகிலன், கிரிசாந் சுசந்தி, நிரோசிகா, சோபிகா, ஆத்மிகா, சங்கர், சுதாசினி ஆகியோரின் பேர்த்தியும் பிரியங்கா, ஜீவிகா, சஞ்ஜே ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2005) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(43565)(32-11-14)

## திருமதி நவரத்தினம் நல்லம்மா



வேம்படி, முருகமூர்த்தி கோயிலடி, தாவடிதெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் நல்லம்மா அவர்கள் 01-12-2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் செல்வராஜா(சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), தவராசா (யாழ்.மாநகர சபை நீர்ப்பகுதி), யோகராசா (கனடா), ரஞ்சிதமலர், யோகமலர், தயாபரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியாதேவி (சுவிஸ்), சுசிலாதேவி(சுவிஸ்), பாலசசி, குகணேஸ்வரி (கனடா), பரமநாதன், நாகரத்தினம், தயானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தயின், கபித், டனித்தா (சுவிஸ்), றனுசா, றனுசன்(சுவிஸ்), கீர்த்திகன், கிஷாந்தினி, கிருசாந், சயிந்பானுசன், மிதுலன், வினோஜினி, சுயாகன், ஜெயந்தன்-சுதாயினி, இந்திரகுமார் - ருசாந்தினி, இளஞ்செழியன், விதுசன், நிதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கதீபன், கீர்த்தனா, துவாரகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(43499)(26-32-11-14)

## V.S. சிவரட்ணம்

*(விலை மதிப்பீட்டாளர், விலை மதிப்பீட்டுத் திணைக்களம்)*



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட லயன் V.S.சிவரட்ணம் அவர்கள் 03-12-2005 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற V.சிவசுப்பிரமணியம் (முன்னாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்) - சிரோன்மணி தம்பதியரின் புதல்வனும் சுபேந்திராதேவியின் பாசமிகு கணவரும் சுகந்தன் (U.K.), சுதர்ஷிகா (U.K.), சுலோஷன் (office employing Service, உரும்பிராய் இந்துக்கல்லூரி), சுதாகரன் (Student SLIIT), சுலக்ஷன் ( A/L 2007, யா/யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சௌமினி, ரமணகாந்தன், பபிதா ஆகியோரின் மாமனாரும் Dr.சிவானந்தராஜா, காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி, சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), Dr.சிவபாலன், சிவதாசன் (பொறியியலாளர்), சிவமனோகரன் (U.K.), சிவலோஜனாதேவி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முத்துக்குமாரு - வள்ளியம்மை ஆகியோரின் மருமகனும் சறோஜினிதேவி (கனடா), நந்தினிதேவி (U.K.), கோகிலாதேவி (Germany) ஆகியோரின் மைத்துனரும் வத்ஷன், சுபக்ஷனா பிருந்துவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (6-12-2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
**077 7149716**
**077 6158769**

தகவல்: **குடும்பத்தினர்.**

(43584)(26-32-11-14)

# பக்தாத்தில் தீவிரவாதிகள் அதிரடித் தாக்கு; 25 ஈராக் படையினர் கொல்லப்பட்டனர்

பக்தாத்,டிச.5

ஈராக் தலைநகர் பக்தாத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்து நடத்திய அதிரடித் தாக்குதலில் குறைந்தது 25 ஈராக்படையினர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது என ஈராக் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் தலைநகர் பக்தாத்திலிருந்து 100 கிலோமீற்றர் வடக்கேயுள்ள அடைம் என்ற இடத்தில் ஈராக் படையினர் பயணம் செய்த வாகனத் தொடரணிமீது வீதியோரக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தீவிரவாதிகள்குழு கனரக ஆயுதங்கள் மூலம் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

தொடர்ந்து ஈராக் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது. தீவிரவாதிகளின் அதிரடித் தாக்குதலில் 25 ஈராக் படையினர்வரை உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காயமடைந்தனர். தீவிரவாதிகள் தரப்பு உயிர்சேதம் குறித்த விவரம் எதுவும் வெளியாகவில்லை.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த அமெரிக்கப் படையினரும், ஈராக் படையினரும் அந்தப் பகுதியை சுற்றிவளைத்துப் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கின் பலூஜா நகரில் தீவிரவாதிகள் நடத்திய வீதியோரக் குண்டுத் தாக்குதலில் 15 அமெரிக்கக் கடற்படையினர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் வன்முறைகள் தீவிரமடைந்து வருகின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் தீவிரவாதிகளின் தாக்குதல் உக்கிரமடைந்துள்ளது. ரமாடி நகரம் சில நாள்களுக்கு முன்னர் தீவிரவாதிகளின் பிடியில் வீழ்ந்தது.

அண்மையில் அமெரிக்கப் படையினரின் மத்தியில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஈராக்கில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை முற்றாக ஒடுக்கியே தீருவோம் எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# 'ஆகாஷ்' ஏவுகணை இந்தியா சோத...

தரையிலிருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட நடுத்தர 'ஆகாஷ்' ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது. இந்தியாவின் ஏவுகணை மேம்பாட்டுத்திட்டத்தின் மைல்கல்லாகக் கருதப்படுவது 'ஆகாஷ்' ஏவுகணை தயாரிப்பு ஆகும். தரையிலிருந்து 25 கிலோமீற்றர் தூரம் பாய்ந்து சென்று விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. பல்வேறு நவீன தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணைச் சோதனை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

ஒரிஸா மாநிலம் பாலாசூர் அருகே சந்திப்பூரில் உள்ள ஏவுகணைத் தளத்தில் நேற்று முன்தினம் காலை 11.05 மணிக்கு இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு விஞ்ஞானிகள் முன்னிலையில் இந்தச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# ஈரானின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இஸ்ரேல் ஏரோ - 2 ஏவுகணைச் சோதனை

ஜெருசலேம்,டிச.5

இஸ்ரேல் ஏரோ - 2 என்ற அதிநவீன ஏவுகணையைத் தயாரித்து வெற்றிகரமாகச் சோதனை நடத்தியுள்ளது. ஈரானிடம் இருந்து இராணுவ ரீதியில் பாதுகாத்துக் கொள்ளவே இந்தச் சோதனை என இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் தொழில்நுட்ப உதவியுடன் ஏரோ - 2 என்ற நவீன ஏவுகணையை இஸ்ரேல் தயாரித்துள்ளது. சுமார் 2 ஆயிரம் கிலோ மீற்றர் அதிக தூரத்துக்கும் சென்று இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடியது. எதிரி விமானங்களை நடுவானிலேயே தகர்க்கும் ஆற்றல்கொண்டது. மிக உயரத்தில் ஏவுகணை ஒன்றைச் செலுத்தி அதன்மீது ஏரோ - 2 என்ற ஏவுகணையைச் செலுத்தி சோதனை முறையில் அதனைத் தகர்த்தனர் இஸ்ரேல் படையினர்.

ஈரான் அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டு வருவதாகவும், சொக்லேட் என்ற சக்திவாய்ந்த ஏவுகணையை அது தயாரித்துள்ளதாகவும் இஸ்ரேல் அண்மையில் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது. (க)



தென்னிந்தியாவில் கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் முக்கிய நகரங்கள் மழை வெள்ளத்தில் மிதக்கின்றன. சென்னை நகரின் ஒரு தோற்றத்தைப் படத்தில் காண்கிறீர்கள்.

# ஈராக் பொலீஸாருக்கு சிறப்புப் பயிற்சி அமெ. படையினர் வழங்குகின்றனர்



பாக்தாத்,டிச.5

அமெரிக்கப் படையினரின் சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்துகொண்டு இதுவரை 75 ஆயிரம் ஈராக் பொலீஸார் வெளியேறியுள்ளனர் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கத் தளபதியான மார்ட்டின் டெம்டி இது குறித்துத் தெரிவிக்கையில்,

ஈராக் பொலீஸாருக்கு அமெரிக்கப்படையினர் நவீன பயிற்சிகளை அளித்து வருகின்றனர். இருநூறு மக்களுக்கு ஒரு பொலீஸார் என்ற வகையில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு பயிற்சிகள் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதில் இதுவரை 75 ஆயிரம் பேர் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு 3,500 பேர் என்ற வீதத்தில் பயிற்சிபெற்று வருகின்றனர். 2006ஆம் ஆண்டு இறுதிக்குள் பயிற்சிகள் யாவும் நிறைவுறும்போது ஈராக் பொலீஸார் முழு அளவில் பணியில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (க)

# பங்களாதேஷில் தாக்குதல் நகர மேயர் உயிர்தப்பினார்

டாக்கா,டிச.5


பங்களாதேஷ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இருந்து நகரமேயர் ஒருவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

பங்களாதேஷ் முஸ்லிம் நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி முஸ்லிம் தீவிரவாதிகள் அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்நாட்டின் வடமேற்கில் உள்ள சைல் ஹெட்டின் மேயர் பத்ருதின் அகமது காம்ரன். இவர் நேற்று முன்தினம் பூப்பந்தாட்ட போட்டி ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

அப்போது அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது கைக்குண்டுகளை வீசினர். அதிர்ஷ்டவசமாக குண்டுகள் வெடிக்காததால் அவர் உயிர் தப்பினார். கடந்த வாரம் ஜமாதுல் முஜாகிதீன் பங்களாதேஷ் அமைப்பினர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர்; நூறு பேர் காயமடைந்தனர். இதேபோல் கடந்த வியாழனன்று காசிப்பூர் என்ற பகுதியில் துணைப் பொலீஸ் தலைமை அலுவலகம் உள்ளேயே தற்கொலைத் தாக்குதல் முயற்சி நடந்தது.

இதில் இருவர் காயமடைந்தனர். அன்றைய தினத்திலிருந்து 70 முஸ்லிம் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த ஒன்பது வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன என பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மேயர் பத்ருதின் அகமது காம்ரன், முன்னால் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். எல்லைப் பகுதியில் ரொக்கெட் தாக்கு; அல் - கெய்டா முக்கிய தளபதி உயிரிழப்பு



இஸ்லாமாபாத்,டிச.5

ஆப்கானிஸ்தான் எல்லையை அண்மித்த பாகிஸ்தான் பகுதியில் அல் - கெய்டா அமைப்பைச் சேர்ந்த முக்கிய தளபதி ரொக்கெட் தாக்குதலில் கொல்லப்பட்டார் என பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் 'த டெய்லி டொன்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி விவரம் வருமாறு:-

ஆப்கானிஸ்தான் எல்லையை அண்மித்த பாகிஸ்தானிய வடக்கு வாசிரிஸ்தான் பகுதியில் - அல் - கெய்டா அமைப்பின் முக்கிய தளபதி அபு ஹம்சா ரபயா உட்பட ஐந்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து அரசு அதிகாரிகள் கடந்த வியாழனன்று வெளியிட்டுள்ள செய்தியில் தீவிரவாதிகள் தங்கியிருந்த வீடு திடீரென மிகப் பெரிய சத்தத்துடன் வெடித்தது. அதில் ஐந்து தீவிரவாதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து சீறிப்பாய்ந்து வந்த ரொக்கெட் அவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது விழுந்து வெடித்துச் சிதறியதாகவும் கூறப்பட்டிருந்தது''

பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது இதை உடனடியாக உறுதிசெய்ய முடியவில்லை எனக் கூறியுள்ளார். உயிரிழந்த ஐந்து பேரில் அல் - கெய்டா இயக்கத் தளபதி ஹம்சாவின் உடல் உட்பட மேலும் இரண்டு உடல்களைத் தீவிரவாதிகள் தூக்கிச்சென்று விட்டனர். தீவிரவாதி ஹம்சாவின் மற்றொரு பெயர் நவாப். தீவிரவாதிகளின் தொலைபேசி உரையாடல் இடைமறித்துக் கேட்கப்பட்து. அடிக்கடி நவாப் இறந்துவிட்டார் என்ற செய்திப் பரிமாற்றம் செய்யப்பட்டது. அதனால், குண்டு வெடிப்பில் இறந்தவர் அல் - கெய்டா தீவிரவாத அமைப்பின் தளபதி ஹம்சா என்ற நவாப் தான் என உறுதி செய்யப்பட்டது.

பாகிஸ்தான் புலனாய்வுத்துறை அதிகாரிகள் இதுகுறித்துக் கூறுகையில்:-

'ஹம்சா எகிப்து நாட்டைச் சேர்ந்தவர்; இவர் ஒசாமா பின்லேடனின் அல் - கெய்டா தீவிரவாத அமைப்பில் வெளிவிவரகாரத் துறையைக் கவனித்து வந்தவர்'' எனத் தெரிவித்தனர்.

ஹம்சா என்ற நவாப் கடந்த மாதம் 5ஆம் திகதி இதே பகுதியில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் இருந்து தப்பியமை குறிப்பிடத்தக்கது. ஆனால், அந்தச் சம்பவத்தில் ஹம்சாவின் மனைவி மற்றும் குழந்தைகள் உட்பட எட்டு பேர் பலியாயினர். எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது. (க)

## உலக அரங்கில்

# நிலக்கரிச் சுரங்கத்தில் திடீர் வெள்ளம் சீனாவில் 42 தொழிலாளர்கள் தவிப்பு

பீஜிங்,டிச.5

சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் 42 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

மத்திய சீனாவில் ஹீனான் மாகாணத்தில் ஷீசி நகரில் உள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் இரவு திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

அப்போது, அந்தச் சுரங்கத்தில் 48 ஊழியர்கள் பணியில் ஈடுபட்டு இருந்தனர். வெள்ளத்தில் தொழிலாளர்கள் சிக்கிய தகவல் அறிந்து மீட்புப் படையினர் விரைந்து வந்து 6 பேரை மட்டும் மீட்டனர்.

எஞ்சிய 42 பேரை மீட்கும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெலாங்ஜியாங் மாகாணத்தில் டாங்ஃபெங் நிலக்கரிச்சுரங்கத்தில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 169ஆக உயர்ந்துள்ளது.

இதில் இருவர் பெண்கள். சுரங்கத்திலிருந்து 73 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். காணாமற்போன 2 பேரைத் தேடும் பணி தொடர்ந்து நடந்துவருகிறது.

இந்த விபத்துத் தொடர்பாக நிலக்கரிச் சுரங்க அதிகாரிகள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (க)










# 5ஆம் தரப் புலமைப்பரிசில்கள் பெற்ற மாணவர்கள் வங்கியினால் கௌரவிப்பு

இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களில் கொமர்ஷல் வங்கியின் "அருணலு" சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துப் பாராட்டும் நிகழ்வு நேற்றுக் காலையில் யாழ்.கிளையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுமாக மொத்தம் 49 பேர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தநிகழ்வுக்கு கொமர்ஷல் வங்கி யாழ். கிளையின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமை வகித்தார். யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கௌரவிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் என்று வங்கி மண்டபம் நிறைந்திருந்தது.

மாணவர்களின் தனி நிகழ்ச்சிகள் விழாவுக்கு சிறப்புச் சேர்ந்தன. அவர்களுக்குரிய பரிசில்களைப் பேராசிரியர்கள் சபா ஜெயராசா, உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், வங்கியின் உதவி முகாமையாளர் கே.ஜெகதீஸ்வரன், எஸ்.குருபாதம் ஆகியோரும் வங்கியின் ஏனைய அலுவலர்களும் வழங்கினர். மாவட்டத்தின் கிராமப் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் பரவலாக இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலே காணப்படும் முதல் மூன்று படங்களிலும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் வீற்றிருப்பதைக் காணலாம்.

நான்காவது படத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூவர்

ஐந்தாம், ஆறாம், ஏழாம் படங்களில் நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள்.

எட்டாவது படத்தில் வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையுரை ஆற்றுவதையும் அடுத்துள்ள படத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா உரையாற்றுவதையும் காணலாம்.

(படங்கள்: இராஜேஸ்வரன்)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா முத்தம்மா

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான திருமதி கந்தையா முத்தம்மா அவர்கள் 30.11.2005 இல் இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ.கந்தையாவின் அன்பு மனைவியும் ஞானானந்தன் (கனடா), திருமதி மங்களநாயகி சீவரட்ணம் (கனடா), திருமதி சறோஜினிதேவி குருச்சந்திரன் (கனடா), நித்தியானந்தன் (கனடா), சரவணபவன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி மங்கயர்க்கரசி கனகரட்ணத்தின் (கனடா) பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2005 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*க.நித்தியானந்தன் (மகன்),*
*கனடா.*
T.P.: 416-740-3026.

(43597)(42-11-46)

தகவல்:
ச.சிவகுமாரன்.

## ஐ.தே.கவில் 13 உறுப்பினர் அரசில் இணைய முயற்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் உட்பட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13பேர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப்பேச அனுமதியைக் கோரியிருக்கின்றனர் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

தேசிய அரசொன்றை அமைப்பது சம்பந்தமான பேச்சுகளை நடத்துவதற்காகவே இவ்வாறான அனுமதி கோரப்பட்டிருக்கின்றது. என்றபோதும் இதுவரை ஜனாதிபதி மஹிந்த அத்தகைய சந்திப்புக்கான இணக்கம் எதனையும் தெரிவிக்கவில்லையென்று கூறப்படுகின்றது.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான விடயத்தில் தனிநபர்கள் ஆதரவைப் பெறுவதை விடுத்து, கட்சியொன்றின் ஆதரவைப் பெறுவதையே தாம் விரும்புகிறார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இதன் அடிப்படையிலேயே அவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதைத் தவிர்த்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.


(க)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
MCS இன் இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள். பதிவுகள் 10/12/2005 இற்கு முன் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (ஆலடிச்சந்தி அருகே, மேல்மாடியில்)
Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP

## மரண அறிவித்தல்கள்

### தம்பித்துரை தர்மதேவா

(நல்லூர் - பிரான்ஸ்)



நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வீரவாணியை வதிவிடமாகவும் கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான தம்பித்துரை தர்மதேவா 30.11.2005 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை (முன்னாள் சாரதி இ.போ.ச.) - கமலாதேவி தம்பதியரின் புதல்வனும் விஜயதேவியின் அன்புக் கணவரும் ஜெயந்தினி (வத்தளை), சறோசினி (வத்தளை), றஞ்சினி, சுபோதினி, சத்தியதேவா (மாத்தளை), மாலினி, விஜயதர்மினி (ஜேர்மனி), சிவாஜினி, வசந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணரத்தினம், காலஞ்சென்ற ரவிபாலச்சந்திரன், இராசரத்தினம்,யோகராஜா, ராணி, காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் ஜெயச்சந்திரன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/14, சங்கிலியன் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (43595)(24-11-46-42)

தகவல்:
திருமதி த.கமலாதேவி (தாய்),
த.சத்தியதேவா (சகோதரன்).

### வல்லிபுரம் பங்கிராஸ்



பொற்பதி, குடத்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் பங்கிராஸ் 02.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வல்லாத்தை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான யோசேப்பு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரோனிக்கம்மாவின் அன்புக் கணவரும் முத்துவேல் சிவலிங்கம் (லண்டன்), ஈஸ்வரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் லீலா, மேரி றெஜினா, லின்டா, மெற்றில்டா, மதுரம், அருள்நேசன் (சுவிஸ்), மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலசேகரம், நோபேட், அன்ரன், கமில்டன், விஜி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமாவும் ஜெனிபேட், ஜெனிதா, சுமதா, சுஜாதா, சுவிதா, சுபத்திரா, ஜெனிஸ்ரன், ஜெனிஸ்ரலா, அலஸ்ரன், அஜந்தா, அஜன், காலஞ்சென்றவரான அனஸ், அன்ஸ், ஜெலினா (சுவிஸ்), ஜெனிஷா (சுவிஸ்), டெலினா (சுவிஸ்), சுபாஸ், புஸ்பன், விஜினோட் ஆகியோரின் அன்புப் பேரனும் சுபனிதாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொற்பதி புனித இராயப்பர் ஆலய சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி,*
*குடத்தனை.*
(8/45662)(24-11-46-47)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# காரைநகர் வடக்கு கடற்கரையில் உள்ள தடுப்பணையைப் புனரமைக்கக் கோரிக்கை

## கடற்றொழிலாளர் சங்கம் உதவி அரச அதிபருக்கு மகஜர்

காரைநகர்,டிசெ.5

காரைநகர் வடக்கு கடற்கரையில் உள்ள கடல் நீர் தடுப்பணையை புனரமைத்துத் தருமாறு காரைநகர் அம்பாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் காரைநகர் உதவி அர சாங்க அதிபரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப் பித்துள்ள மகஜரில் தெரிவித்திருப்பதாவது:-

எமது சங்கத்தின் தொழிலாளர்கள் தொழில் புரியும் சாம்பலோடை வடக்குப் புற கடற்கரையின், கோவளம் வெளிச்ச வீடு தொடக்கம் கசூரினா பீச் வரையான கடற்கரைப் பகுதி கடந்த வாரம் பெய்த கடும் மழையினாலும் பலத்த காற்றினாலும் அழிவுற்று கடல்நீர் சாம்பலோடைப் பகுதிக்குள் உட்புகுந்துள்ளது.

அத்துடன் எமது பகுதி மீனவர்களின் படகுகள், இயந்திரங்கள், கட்டுமரங்கள் என்பவற்றை கடல் அடித்துச் சென்றுள்ளதால் கரையில் இந்த உபகரணங்களை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச் சம்பவத்தின் போது ஒரு படகு உடைந்துள்ளது என்பதனையும் அறியத்தருவதுடன் இந்த நிலைமையினைத் தாங்கள் பார்வையிட்டு எமது கடற்கரைக்கு அணைகட்டும் வேலையினை மேற்கொண்டு தொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு பாதுகாப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு தருமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்று உள்ளது.

(ஐ-73)


உ
சிவமயம்

### தசாகாதி கிரகயெக்ஞ அழைப்பு

28.11.2005 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த

**திருமதி கணேசராஜக்குருக்கள் செல்லம்மா அம்மையார் சின்னத்துரைஐயர்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் கண்டியில் நடைபெறும்.

07.12.2005 புதன் தசாகம்
08.12.2005 வியாழன் ஏகோதிஷ்டம் மாசிகம்
09.12.2005 வெள்ளி சபிண்டீகரணம்
10.12.2005 சனி கிரகயெக்ஞம் (பிராமண சமாராதனை)

உற்றார், உறவினர் கலந்து பிரார்த்தனை செய்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

சிவஸ்ரீ சி.சிவகுமாரக்குருக்கள்,
10/1, மாப்பணாவத்தை றோட், கண்டி.
தொ.பே.: 081-2213734.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(43604)(30-12-17)
குடும்பத்தினர்.



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்



**திருமதி சதாசிவம் தவமணி**

கடந்த 05.11.2005 சனிக்கிழமை எம்மைவிட்டுப் பிரிந்த அன்புத் தெய்வம் திருமதி சதாசிவம் தவமணி அவர்களுக்கு நாம் செலுத்தும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (05.12.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும்.

அவ்வேளை, நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

127,இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.
(43609)(30-12-17-34)

தகவல்:
ச.கனகசபாபதி (மகன்-சபா)
சிறி கருமாரி நகையகம்,
யாழ்ப்பாணம்.



### ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
28.07.1933

உதிர்வு
05.12.2004

மூத்த எழுத்தாளர்

**K.V.நடராஜா**

ஓராண்டுகள் சென்றாலும் - எம்
பாசமுள்ள தெய்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

''பிரகஸ்பதி''
கணேஸ்வரம்,
அளவெட்டி. (43606)(30-12-17)

மகள்
குடும்பத்தினர்.


## 6 வீடுகளைப் பெற்றுக்கொண்ட எம்.பி. புலனாய்வு வலையில்!

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஆறு வீடுகளைப் பெற்றுக்கொண்ட விவகாரம் தொடர்பில் விசேட பொலீஸ் குழுவொன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் விசாரணைகளை நடத்தவுள்ளது எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளருக்கே ஆதரவை வழங்குமென்று கூறி மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் இந்த வீடுகளை அரசுத் தரப்பிடமிருந்து பெற்றுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்த இந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு சொந்தமான மதுபானசாலைகள் மற்றும் அவற்றின் வருமானங்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.


### கணனிப் பயிற்சி ஆசிரியர் தேவை

புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் நடைபெற்றுவரும் கணனிப்பயிற்சி வகுப்பினை நடத்துவதற்கு ஆசிரியை ஒருவர் உடனடியாக தேவைப்படுகின்றார். வளாகத்திலேயே தங்குவதற்கு வசதி செய்து தரப்படும். ஆர்வமுள்ளோர் உடன் பின்வரும் தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ளவும்.

(43605)(30) **021 222 3900**



மனோகரா யாழ்ப்பாணம்






ராஜா யாழ்ப்பாணம்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினீத், விஜயகுமார் நடித்த

சந்திரமுகி காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30.



நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த

ஆணை தினசரி புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


## கைதடியில் நிவாரண பொருள் விநியோகம்

கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கான மூன்று மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றது. கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கான உலர் உணவுப் பொருள்களே சங்கத்தின் கிளைகளில் கடந்த மாதம் 28ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று சங்கத் தின் வர்த்தக முகாமையாளர் ந.குமாரதேவன் தெரிவித்தார். இந்த நிவாரண விநியோகம் எதிர்வரும் 16ஆம் திகதி நிறைவுபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-17)

## மரண அறிவித்தல்கள்


### குணரத்தினம் கிஷ்ணகுமார்

(உரிமையாளர்- சிறிகிஷ்ணா வீடியோ விஷன்)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் கிஷ்ணகுமார் 01.12.2005 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் குணரத்தினம் - ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும் தவராசா, உமாதேவி, சிவபாதசுந்தரம், பேரின்பநாதன் ஆகியோரின் மருமகனும் கிரிஷாவின் அன்புக் கணவரும் டிரோஷாவின் அன்புத் தந்தையும் வசந்தகுமாரி, விஜயகுமாரி, செல்வகுமாரி, உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராகவன் (டுபாய்), சொர்ணலிங்கம், ஸ்ரீதரன் (லண்டன்), வான்மதி (கனடா), தர்ஷா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2005) திங்கட்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (43608)(30-12-17)

தகவல்:
சிவபாதசுந்தரம் (மாமா)



### திருமதி இராசையா அன்னம்



சிறாம்பியடியைப்பிறப்பிடமாகவும் பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா அன்னம் 02.12.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மா,பாக்கியம், தம்பையா ஆகியோரின் சகோதரியும் இந்திராணி, சந்திரலீலா, தர்மராஜா (பிரான்ஸ்), பத்மாவதி, சுந்தரேஸ்வரி, மகேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராஜா,கருணைராஜன், வசந்திராதேவி (பிரான்ஸ்), தம்பிராஜா, சுதர்ஸன், பிறேமரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் விஜி, பிறேம், நிஷாந்தினி, சுயேஷ்குமார், (டென்மார்க்), நிலாந்தினி தனபாலசிங்கம் (பாபு), நித்தியா(பிரான்ஸ்), கோபி (பிரான்ஸ்), கோகுலன் (பிரான்ஸ்), ராஜூ (பிரான்ஸ்), ரம்மியா, இந்து, பிரியங்கா, சொப்னா, பௌத்திகா, சிந்து (பிரான்ஸ்), சாரு (பிரான்ஸ்), மகி, சர்மி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் அஜிந்தன் (டென்மார்க்),அபிஷன், கிரிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ்ப்பாணம் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
யாழ்ப்பாணம். (43600)(30-12-17)

தகவல்:
பிள்ளைகள்.



### ஐயாத்துரை பூபாலசிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் 15, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பூபாலசிங்கம் (பிரபல வர்த்தகர்) 02.12.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.12.2005) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15,
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (43609)(30-12-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.



### திருமதி சிவலிங்கம் ஜெயலட்சுமி

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் ஜெயலட்சுமி அவர்கள் நேற்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் கார்த்திகாவின் அருமைத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும் தனலட்சுமி (அமரர்), பரணிமலர், சரவணபவானந்தன், நிற்குணானந்தன், சண்முகலிங்கம் (அமரர்), விஜயலட்சுமி, ஜெயராணி, சற்குணநாதன், ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.12.2005) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (சி-46635)(30-12-17)

தகவல்:
சரவணபவானந்தன் (சகோதரன்)

# பேச்சு மூலமான தீர்வில் விடுதலைப் புலிகள் நேர்மையாக இல்லை என்பது வெளிப்படுகிறது

## கோண்டாவில் தாக்குதல் குறித்து அரசு அறிக்கை

அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்குப் புதிய ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கும் இந்தச் சமயத்தில் ஆத்திரத்தைத் தூண்டும் புலிகளின் இத்தாக்குதல் நடந்திருக்கிறது. இது புலிகள் பேச்சு மூலமான அரசியல் தீர்வில் இதயசுத்தியுடன் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

கோண்டாவில் கிளைமோர் தாக்குதல் குறித்து அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோண்டாவிலில் இராணுவத்தின் அறுவர் கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அரசு இயன்ற வகையில் கடுமையாகக் கண்டிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ நிலைகளுக்கும், காவலரண்களுக்கும் உணவு வகைகளை விநியோகித்துக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

வழமையான - மோதல் செயற்பாடாக அமையாத - நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே முன்னரே திட்டமிட்டு இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகியுள்ளது. யுத்தநிறுத்த ஏற்பாடுகளை அப்பட்டமாக மீறும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிக்க வருமாறு புதிய ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள இந்தச் சமயத்தில் இவ்வாறு ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பேச்சு மூலமாக அரசியல் தீர்வில் புலிகள் நேர்மையாக இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றது.

அமைதி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு எதிராகத் தடைபோடும் இத்தகைய பயங்கரவாதச் செயலை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும் என அரசு கோருகின்றது.

கடந்த 24 மணி நேரத்தில் இராணுவ நிலைகள் மீதான சூடுகள், கிரனேட் வீச்சு போன்ற - ஆறு சம்பவங்களுக்கு இடையில் - இந்தக் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது. படையினர் மீதான தாக்குதல் அதிகரித்து வருவதை இது தெளிவாகக் காட்டுகின்றது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ-க)

## உயர் மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அங்கு அவசரமாக - ஹெலி மூலம் - அனுப்பிவைத்தார்.

திட்ட அமுலாக்கல் பிரதியமைச்சர் ஹுசைன் பைலா, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்.எம். சஹீட், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரடங்கிய இந்தக் குழு, மூதூரில் ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர்களையும் இதர மதத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியது.

அதேபோல், பாதுகாப்புப் படைகளின் முக்கியஸ்தர்களையும், கண்காணிப்புக் குழுவின் முக்கியஸ்தர்களையும் இந்தக் குழு சந்தித்துப் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

நேற்றுமாலை கொழும்பு திரும்பிய இந்தக் குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து திருகோணமலை நிலைமைகளை எடுத்துக் கூறினர். மூதூரில் தேவையானால் பொலீஸ் ஊரடங்கு பிறப்பிக்கவும் நேற்றுமாலை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (எ-க)

## மஹிந்த ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஒன்றும் செய்யமுடியாது என்று பொலீஸார் கைவிரிக்கின்றனராம்.

கருணா குழுவினருடனான மோதல்களினால் அல்லது கருணா குழுவினரின் முகாம் மீதானத் தாக்குதல்களினால் தங்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும் என்று அச்சப்படும் அப்பகுதி மக்கள், இவ்விடயம் தொடர்பாகத் தமது எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் அப்பிரதேசத்தில் உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு முன்னால் இன்று திங்கட்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திக் காட்டத் திட்டமிட்டு வருகின்றனர்.

- இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

ஒருபுறம் பேச்சு, சமாதான முயற்சி என்று கூறும் புதிய அரசுத் தலைமை அதேசமயம் யுத்தத்துக்கும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு வருகிறது என இக்கட்டுரையாளர் தமது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது -

யுத்தநிறுத்த ஏற்பாட்டைத் திருத்தி அமைக்கும் விடயத்திலும், ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேச்சுகளை ஆரம்பிக்கும் விடயத்திலும் ஓர் இணக்க நிலைக்கு புலிகள் வராவிட்டால், நெருப்பை நெருப்பால் சந்திக்கத் தயார் என்ற செய்தியைப் புலிகளுக்கு, புதிய அரசுத் தலைமை கொடுக்க விரும்புகிறது. அதுவே இப்போதைய போக்குகளின் அடியில் இருந்து வெளிப்படும் விவகாரமாகும். - என்றும் அந்தப் பத்தி எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

''இறுதியில் வரப்போகின்ற யுத்தத்துக்கு ஒருபுறம் தங்களைத் தயார்படுத்திக்கொண்டே மறுபுறத்தில் கூடிப் பேசத் தயாராகிறார்கள் விடுதலைப் புலிகளும் புதிய ஜனாதிபதி யும்.'' - என்ற தலைப்பில் இப்பத்தியை இம்முறை வரைந்திருக்கின்றார் சுரனிமல. (எ-க)

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

இதனால் மக்கள் ஒருவகை பயப்பீதியுடன் வீதியில் நடமாடியதை அவதானிக்க முடிந்தது.

வீதியில் சென்ற பொதுமக்களின் அடையாள அட்டைகளைப் படையினர் பரிசோதித்ததுடன் அவர்களைத் துருவித்துருவி விசாரணை நடத்தினர்.

இதேசமயம் நேற்றிரவு 10.45 மணியளவில் அரியாலை, கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் வேட்டுச் சத்தங்கள் விட்டுவிட்டுக் கேட்ட வண்ணம் இருந்தன. ஏற்பட்ட இழப்புகள் குறித்த விடயங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

(எ-7-17-190-202-410)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதுடன் மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடின. அத்துடன் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியதையும் அவதானிக்க முடிந்தது. நேரகாலத்துடனேயே மக்கள் வீடுகளில் முடங்கிக்கொண்டனர்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதப்படுத்த நேற்றிரவு முழுவதும் 'உதயனு'க்கு தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புக்களும் கிடைத்தன. இவ்வாறு கிடைத்த தொலைபேசி அழைப்புகளில் ஏ-9 வீதி மூடப்பட்டுவிட்டதாக செய்தி வெளியாகி இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய பலாலி படைத் தளத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

''ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் அனைத்தும் வெறும் வதந்தியே. ஊர்ஜிதமற்ற இந்த வதந்திகளை மக்கள் நம்பிவிடக்கூடாது. ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் படையினருக்கு ஏற்படவில்லை.

''ஏ-9 வீதி மூடப்படுவதாக வெளிவந்த செய்திகளிலும் எதுவித உண்மையும் இல்லை. இவை அனைத்தும் வெறும் வதந்தியே'' - என்று நேற்றுப் பின்னிரவு உறுதிபடத் தெரிவிக்கப்பட்டது.

## கோண்டாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்

'சம்பவம் நடந்து அரைமணி நேரத்தில் திருநெல்வேலிச் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பலாலி வீதிப் பகுதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது. மாலைவரை அப்பகுதி ஊடாகப் போக்குவரத்து ஏதும் இடம்பெறவில்லை.

பொதுமக்களின் போக்குவரத்து வேறு பாதைகள் ஊடாக இடம்பெற்றன.

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் வடக்கில் நடந்த முதலாவது கிளைமோர்த் தாக்கு தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மரத்தில் பொருத்தப்பட்டு கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதா அல்லது நிலத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இராணுவ சார்ஜன்ட் ஆனந்த, சிப்பாய்களான ரட்னாயக்கா, பிரியந்த, ருவான்குமார, நிமல்சிறி, நவரட்ன ஆகியோரே உயிரிழந்தனர். ஜயதேவ என்ற சிப்பாயே படுகாயமடைந்தார். அவர் பலாலிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு விரையப்பட்டார்.

கிளைமோர் குண்டுத்தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு நேற்றுமாலை சென்ற யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரன், உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களைப் பார்வையிட்டதுடன் விசாரணை நடத்தினார்.

பின்னர், உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்கள் இராணுவ வாகனத்தில் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் சடலங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் பொலீஸாரும் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தியுள்ளனர். மேற்படி சம்பவத்தை அடுத்து திருநெல்வேலி - பரமேஸ்வராச்சந்தி தொடக்கம் கோண்டாவில் வரையான பலாலி வீதிப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே படையினர் வீதிச்சோதனைகளையும் மேற்கொண்டனர்.

(எ-க-3-7-49-15-86-78-410)

## நோர்வே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசு பதவியேற்றபின் சமாதான முயற்சிகளில் அது கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாகவும் -

சமாதானமுயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது தொடர்பாகவும் -

இப்பேச்சில் ஆராயப்படவிருக்கின்றது எனத் தெரிகிறது. (எ-க-3)

## நீர்வேலியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் - படையினர் மீதான தாக்குதலையடுத்து அப்பகுதியில் சுமார் இருபது நிமிடங்கள் வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நீண்ட தொலைவுக்கு அப்பால் - குடியிருப்புப் பகுதிகளில் சன்னங்கள் வந்துவீழ்ந்தன.

இதற்கிடையில் - நேற்றிரவு யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினார்.

(எ-7-15-72-75-42-410)

## மூதூரில் பதற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினரும், சர்வமதத் தலைவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் வர்த்தகர்கள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மாடுகள் வாங்குவதற்காக நேற்றுமுன்தினம் காலை சென்றிருந்த இவர்கள் மாலை வரை வீடு திரும்பியிருக்கவில்லை. இவர்களைத் தேடி உறவினர்கள் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறால்குழி பிரதேசத்தில் இவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மாடுகளை வாங்குவதற்காகச் சென்ற நால்வரில் மூவர் சடலங்களாகவும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் இருந்தமை மூதூரில் பெரும் பரபரப்பை எற்படுத்தியது.

கைகள் கட்டப்பட்டு, அடிகாயங்களுடன் அவர்களின் சடலங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தினையடுத்து, தொடரும் பதற்ற நிலையினால் மூதூரில் நேற்று இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. இராணுவத்தினரும், பொலீஸாரும் மூதூர் கிராமங்களில் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர். இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டக் குழு நேற்று மூதூருக்கு விரைந்து, அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டது.

ஆனாலும், அச்சம் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தோப்பூர் பிரதேசத்தில் இரு தமிழர்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டனர் எனவும், அவர்கள் தொடர்பில் எந்தத் தகவலும் தெரியவரவில்லையென்றும் மற்றுமொரு பிந்திய தகவலொன்று நேற்று மாலை கிடைத்தது.

மூதூரில் இரு இனங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையைத் தணிப்பதற்காகப் பல சிவில் அமைப்புகள் முயற்சி செய்து வருகின்றன. முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சந்திப்பொன்றை ஏற்படுத்துவதற்காகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நடவடிக்கையொன்றை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### விசாரணைகள்

இதற்கிடையில்,கடந்த இரண்டு நாள்களாக மூதூரில் இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் கொலைகள் தொடர்பில் மூதூர் பொலீஸார் தனி விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். பக்கச்சார்பின்றி விசாரணை நடத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலீஸ்மா அதிபர், கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபரைப் பணித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-க-410)


NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2006
சடப்பொருளின் இயல்புகள்
ஆரம்பம்: wed. 3.30-4.30 P.M. (7.12.2005)
"நிலை மின்புலம்"
ஆரம்பம்: wed. 4.30-5.30 (7.12.2005)
"துரித மீட்டல் வினாவிடை"
Mon.,Thur.,Fri. 1.00 -2.30 P.M.
(43583)
By: எந்திரி : விமல்ராஜ்

புதிய நியூட்டன் அக்கடமி
அரசடிப் பிள்ளையார் கோயிலடி,
கோண்டாவில்.
கல்வியாண்டு -2006
தரம் 3முதல் O/L வரை சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம் 07.12.2005 புதன்4.00 P.m.
(43550)

கல்விச் சேவையில் 16 ஆவது ஆண்டில்...
கல்வியாண்டு-2006
தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்பு ஆரம்பம்:
11.12.2005 (ஞாயிறு)
காலை 9 மணி (மு.நே.)
* தகுதி-அனுபவம்-திறமை வாய்ந்த ஆசிரியர்களின் சேவை.
* ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் மட்டும் அனுமதி.
* அனுமதிகளை 11.12.2005 இற்கு முன் பெற்றுக்கொள்ளவும்
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, (சி-46605) யாழ்ப்பாணம்.

புதிய கல்வியாண்டு 2006
EVENING CLASS
தரம் 6 தொடக்கம் O/L வரை ஆரம்பம்:10.12.05 (2.00)
புதிய பிரிவு !!
O/L SAT., SUNDAY CLASS மட்டும் 8.30-2.30
ஆரம்பம்:10.12.05 (2.00)
தலைநகரில் தன்னிகரில்லாத தனித்துவமான ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(43510) அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

பதவி வெற்றிடம்
கணனி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1) விரிவுரையாளர் (பகுதி நேரம்) - Corel Draw, Photoshop, Pagemaker
2) விரிவுரையாளர் (பகுதி நேரம்) - Word, Excel, Access
3) விரிவுரையாளர் - Auto CAD
4) எழுதுவினைஞர்
5) போதனாசிரியர்
(சி/46611)
விளம்பர இலக்கம் - 2763
உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### லயன் கிருஷ்ணபிள்ளை துரைராசா

(முன்னாள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் 'திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கிருஷ்ணபிள்ளை துரைராசா நேற்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

287, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-46626)(30)

தகவல்: மனைவி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.